புருஷனையுடையவளின் பர்த்தா இவர்களின் அன்னம்; கள்ளப்புருஷனைத்தெரிந்து வீட்டில் வைத்திருப்பவன், ஸ்த்ரீக்குட்பட்டவன், இறந்தநீட்டுள்ளவன் இவர்களின் அன்னம்; தன் மனஸிற்குப் பிடியாதவனுடைய அன்னம் இவைகளைப் புஜிக்கக்கூடாது. அப்படிச்செய்தால் அரசனுடைய அன்னம் தேஜஸையும்; சூத்ரனுடைய அன்னம் ப்ரஹ்ம தேஜஸையும்; தட்டானுடைய அன்னம் ஆயுஸையும்; சக்கிலியனுடைய அன்னம் கீர்த்தியையும் நாசம்செய்யும். வைத்யனுடைய அன்னம் சுவர்நீரைச்சாப்பிட்ட தோஷத்தையும், குடிசைக்காரியின் அன்னம் ரேதஸைச் சாப்பிட்ட தோஷத்தையும், வட்டியினற் பிழைக்கிறவனுடைய அன்னம் விஷ்டையைச்சாப்பிட்ட தோஷத்தையும், ஆயுதம் விற்பவன் அன்னம் கோமைமுதலான மலத்தைச்சாப்பிட்ட தோஷத்தையும் உண்டுபண்ணும். ச்ரார்த்தம், பஞ்சமஹாயக்ஞம் முதலியவையில்லாத சூத்ரனுடைய அன்னத்தைப்புஜிக்கக்கூடாது. தனக்கு வேறு பிழைப்பில்லாவிட்டால் அவனிடத்திலொருநாளைக்குப போதுமான அரிசியை வாங்கிக்கொள்ளலாம். வேதமோதினவன் கிருபணனும், அதிகமாகத் தானங்கொடுப்பவன் வட்டியால் பிழைக்கிறவனுகியும இருந்தால் இருவா அன்னமும ஸரியான தோஷமுளளதா? பேதமுள்ளது. ஏனென்றால் அதிக தானங்கொடுப்பவன் ச்ரத்தையோடு கொடுக்கிறன்; மற்றொருவன் ச்ரத்தையில்லாமற்கொடுக்கிறன். ஆதலால் ச்ரத்தையோடு கொடுப்பதே உயர்ந்தது. தினந்தோறும் யாகஞ்செய்தாலும், குளம்வெட்டுதல் முதலிய தர்மஞ்செய்தாலும் ந்யாயமாக ஸம்பாதித்த பொருளால் அன்புடன் செய்தால், அவ்விரண்டும் செய்தவனுக்கு மறுமையில அழிவற்ற ஸௌக்யத்தைக் கொடுக்கும். தானஞ்செய்தாலும், முன் சொன்னவிரண்டுதாமஞ்செய்தாலும், மனக்களிப்போடு நல்லவிடத்திலும் நல்ல பாத்ரத்திலும் செய்யவேண்டியது. அப்படியிலலாதவன் தன்னை யாசித்தாலும் பொறுமையின்றி அவனுக்கு அன்னங்கொடுக்கவேண்டியது. ஆதனற் பாபம் நேரிட்டாலும, ஸத்பாத்ரத்தில் செய்கிற தானம் அதை நீக்கிவிடும். ஜலம், அன்னம், பசு, பூமி, வஸ்த்ரம், எள், ஸுவர்ணம, நெய் இந்தத் தானங்களைவிடப் ப்ரஹ்மஞானதானம் உயர்ந்தது. எவன் மர்யாதையோடு தானஞ்செய்கிறனே, எதை அவன் வாங்குகிறனே, இவ்விருவரும் ஸ்வர்க்கத்தையடைகிறர்கள்.

கடினமான தபஸ்செய்தோமென்று கர்வத்தையடையக்கூடாது. யாகஞ்செய்தபின்பு பொய்சொல்லலாகாது. ப்ராஹ்ம

ணர்களால் துன்பப்பட்டிருந்தபோதிலும் அவர்களை அவமானஞ் செய்யக்கூடாது. தான் தானங்கொடுத்ததைப் பிறருக்குச்சொல்லக்கூடாது. யாகம் பொய்சொல்லுதலினாலும், தபஸ் கர்வத்தினாலும், ஆயுஸ் ப்ராஹ்மண அவமானத்தினாலும், தானம் பிறரோடு சொல்லுதலினாலும் அழிந்துபோய்விடுகின்றன. பரலோகஸாதனமான தர்மத்தை ஒருவரையும் பீடியாமல், கறையான் முதலானவை புற்றையுண்டுபண்ணுகிறதுபோல கொஞ்சங்கொஞ்சமாக ஸம்பாதிக்கவேண்டியது. தகப்பன், தாய், பிள்ளை, பெண்சாதி, பங்காளி இவர்களெல்லாம் பரலோகத்துக்கு ஸஹாயமாக வரமாட்டார்கள். தர்மமொன்றே ஸஹாயமாக வரும் ஜந்து, பிறக்கும்போது தான் ஒன்றாகவே பிறக்கிறது. இறக்கும்போதும் தான் ஒன்றாகவேயிறக்கிறது. புண்யபாபத்தையும் தான் ஒன்றாகவேயனுபவிக்கிறது. தாய்முதலானவர்களுடைய ஸுக துக்கம் அவனுக்கு வரமாட்டாது. பூமியில் அவனிறந்தபின்பு அவனுடைய சரீரத்தை விறகு, மண்கட்டி இவைகளைப்போல் எறிந்துவிட்டுப் பந்துக்களெல்லாம் போயவிடுகிறார்கள். தர்மம் மாத்ரம் அவனை எப்போதும் பின்செல்லுகிறது. ஆகையால் தர்மத்தினாலே நரகம் முதலிய துக்கங்களைத்தாண்டுகிறபடியால், அந்தத்தர்மத்தையே தனக்கு ஸஹாயத்திற்காக நாள்தோறுங் கொஞ்சங்கொஞ்சமாகச் செய்யவேணடியது. தன் குலத்திற்குப்புகழைத் தேடவேண்டுமானால் வேதத்தாலும், தபஸாலும் உயர்ந்தவரோடு விவாஹம் முதலிய ஸம்பந்தங்களைச்செய்யவேண்டியது. தாழ்ந்தவர்களை நீக்கவேண்டியது. ப்ராஹ்மணன் வேதத்தினால் உயர்ந்தவர்களிடத்தில் ஸஹவாஸம்பண்ணிக்கொண்டும், ஹீனர்களுடன் ஸஹவாஸஞ்செய்யாமலுமிருந்தால் ச்ரேஷ்டனாவான்; இல்லாவிட்டால் சூத்ரனுக்கு ஸரியாவான். யத்னித்த கார்யத்தை முடிக்கிறவனும், சாந்தனும், ஸுகதுக்கத்தைப் பொறுக்கிறவனும், துஷ்டஸஹவாஸம், ஹிம்ஸை இவைகளைச் செய்யாதவனுமிருந்தால், அவன் தபஸில்லாமலே இந்த்ரியநிக்ரஹத்தாலும், தானத்தாலும் ஸ்வர்க்காதிலோகங்களையுடைவான். விறகு, ஜலம், கிழங்கு, பழம், அன்னம், தேன், அபயஸ்தானம் முதலானவை தான் யாசிக்காமல கிடைத்தால், பதிதர்கள் நீங்கலாக மற்ற யாரிடத்திலும் வாங்கிக்கொள்ளலாம். தான் நேராகவாவது, ஒருவரைக்கொண்டாவது கேட்காமலிருக்கும்போது தானிருக்குமிடத்திற்குக்கொண்டுவந்து, ஸங்கல்பபூர்வமாகக்கொடுக்கிறேனென்று சொல்லாமல் கொடுக்கப்படுகிற ஸுவர்ண முதலானவைகளைப் பதிதர் நீங்கலாக மற்ற பாபிகளிடத்

திலும் வாங்கலாமென்று ப்ரஹ்மா அபிப்ராயப்படுகிறார். கற்பூரம் முதலிய வாஸனாத்ரவ்யங்கள், படுக்கை, வீடு, தர்ப்பை, ஜலம், புஷ்பம், ரத்னம், தயிர், அவல், அரிசி, மீன், பால், மாம்ஸம், கறி இவைகள் வலுவில் வந்தால் நீக்கக்கூடாது. பசியினால் துன்பப்படுகிற தாய், தகப்பன், குரு, வேலைக்காரர் இவர்களைக் காப்பாற்றுகிறவனும், தேவர்களையும் அதிதிகளையும் பூஜிக்கிறவனுமிருக்கிறவன் யாரிடத்திலும் தானம் வாங்கலாம். அவைகளால் தான் ஜீவிக்கக்கூடாது. தனக்குப் பயிரிடுகிறவன், தன் குலத்தில் தொன்றுதொட்டு ஊழியஞ்செய்கிறவன், தன இடையன் வேலைக்காரன் அம்பட்டன், தன்னைக் காப்பாற்றவேண்டுமென்றடுத்தவன் இவர்களுக்குத் தன் வீட்டிலிருந்து அன்னம்போடலாம். தான் மற்றொருவனையடுக்கும்போது தனது ஸ்வபாவம், தொழில், கோறிக்கை முதலியவைகளை உண்மையாக அவனிடத்தில் சொல்லி, தன்னையவனிடத்தில் ஒப்புவிக்கவேண்டியது. தனது குலத்தை மாற்றிச சொல்லுகிறவன் ஆத்மத்ரோஹி: திருடனைவிட அதிக பாபி.

வேதங்களை ஓதாமையாலும், தன் ஆசாரத்தை விடுவதனாலும், தான் செயயவேண்டிய கார்யங்களைத் தனக்குச் சக்தியிருக்குமபோது சோம்பலால் விடுவதாலும், சாப்பிடத்தகாத பதார்த்தங்களைசசாப்பிடுவதாலும் முதல்மூன்றுவர்ணத்தாரும் அகாலத்தில இறக்கிறார்கள்.

முள்ளங்கி, முருங்கை, வெங்காயம், மரத்திலும் பூமியிலுமுண்டான காளான், அசுத்தமானவிடத்திலுள்ள பதார்த்தங்கள், மரத்தில் ஸ்வயமாயும் வெட்டினதினாலும் உண்டான சிகப்பு மெழுகு, உள்ளிப்பூண்டு, சீம்பால், தயிர், தேவதைகளைக் குறியாமல் தனக்காகச்செய்த எள்ளன்னம், பாயஸம், வடை, யாகமின்றி மந்த்ரமில்லாமல் கொல்லப்பட்டஜந்துக்களின் மாம்ஸம், தேவதைக்கு நைவேத்யஞ்செய்யாத அன்னம், ஹவிஸ்; கன்றுபோட்டுப் பத்துநாளாகாத பசு ஆடு எருமை ஒட்டகம் ஒற்றைக்குளம்புள்ள குதிரை முதலானவை, புணரும் பருவத்திலிருக்கிற பசு முதலியவை, செம்மறியாடு, சினைப்பசு, கன்றுசெத்தபசு, ஸ்த்ரீ, காட்டெருமை நீங்கலாக மற்றமிருகங்கள் இவைகளின் பால்; புளித்துப்போன பால் இந்தப் பதார்த்தங்களை விலக்கவேண்டியது. (புளித்துப்போன பதார்த்தங்களுக்குள் தயிரும், அதிலுண்டான வெண்ணெயும்; ஜலஸம்பந்தத்தால் புளித்த பழம், கிழங்கு, புஷ்பம் இவ்வித ஊறுகாய்களும் சாப்பிடத்தக்கவை.)—மனுஸ்மிருதி. 4.

**வானப்ரஸ்த தர்மம்.** வ்ரதானுஷ்டானமுள்ள த்விஜன், இந்தப்படி கிருஹஸ்தாச்ரமத்திலிருந்து பரிசுத்தனாய், இந்த்ரியங்களை யடக்கிக்கொண்டு, வானப்ரஸ்தாச்ரமத்தை அடைந்து தபோவனத்தில் வஸிக்கவேண்டியது.

கிருஹஸ்தன் தன் தேஹத்தில் நரையையும் தன் பிள்ளைக்குப் பிள்ளையையும் எப்போது பார்ப்பானோ, அப்போது வானப்ரஸ்தாச்ரமத்தையடையவேண்டியது. தனக்கு அதுவரையிலும் வழக்கமான ஸகல ஆஹாரங்கள், போகங்கள், வேலைக்காரர்கள் இவர்களை நீக்கிவிட்டு, மனைவியைப் பிள்ளையினிடத்தொப்புவித்தாவது, அல்லது அவளுககுக்கூடவர இஷ்டமிருந்தால் கூட்டிக்கொண்டாவது வனததிற்குப்போகவேண்டியது. அக்னிஹோத்ரத்தையும், ஸ்ருக ஸ்ருவம் முதலிய ஹோமபாத்ரங்களையும் எடுத்துக்கொண்டு, ஊரிலிருந்து வனத்திற்ப்ரவேசித்து ஜிதேந்த்ரியனாயிருக்கவேண்டியது. சால்யன்னம, காய், கிழங்கு, பழம, இவைகளால் கிருஹஸ்தாச்ரமத்திற்சொல்லிய பஞ்சமஹாயக்யங்களை விதிப்படி செய்யவேண்டியது. மானதோல்முதலியவற்றையாவது, மரவுரியையாவது தரிக்கவேண்டியது. காலையிலும் மாலையிலும் ஸ்நானஞ்செய்யவேண்டியது. ஜடை, மீசை, தாடி, நகம் இவைகளை வளாக்கவேண்டியது. இவன எதைச் சாப்பிடுகிறானோ அதனாலேயே பலியையும், பிக்ஷைகளையும் தன்சக்திக்குத தக்கபடி கொடுக்கவேண்டியது. ஜலம, கிழங்கு, பழம் இவைகளால் தன்னாச்ரமத்துக்கு வநதவர்களைபபூஜிககவேணடியது. எப்போதும் வேதமோதுவதில் ஜாகரதையுள்ளவனாயும், குளிர் கானல் முதலிய ஸுகதுக்கங்களைப்பொறுக்கிறவனாயும், ஸகலப்ராணிகளுக்கும் இஷ்டனாயும், எப்போதுங்கொடுப்பவனாயும் தான் வாங்காதவனாயுமிருக்கவேணடியது.

அக்னிஹோதரம், தர்சம், பௌர்ணமாஸம் இவைகளை மனைவியின்றி வந்திருந்தபோதிலும் விடாமல் தன சக்திக்குத்தக்கபடி செய்யவேண்டியது. நக்ஷத்ரயாகம், ஆக்ரயணம், சாதுர்மாஸ்யம், உத்தராயணம், தக்ஷிணாயணம் இவைகளை உதிர்நெல் பொறுக்கிஸம்பாதித்துச் செய்யவேண்டியது; வஸந்தருது, சரத்ருது இந்தக்காலங்களில காட்டிலுண்டானதாயும் பரிசுத்தமாயுமிருக்கிற சம்பாநெல, கார்நெல் இவைகளைத்தானாகவே பொறுக்கிவந்து, அதன் அரிசியினால் புரோடாசம், (ஹோமத்திற்காக மாவினால் உப்பில்லாமல தட்டிச்சுடப்பட்ட அடை) சரு, (வழுதத அரிசியினால உப்பினறிச்சமைத்த அன்னம்) இவைகளைச்செய்யவேண்டியது. அவைகளைத் தேவர்களுக்கு ஹோமஞ்

செய்து மிருத்திகையைத் தான் புஜிக்கவேண்டியது. உவர்மண்ணால தனக்கு வேண்டிய உப்பைத்தானாகவே காய்ச்சிக்கொள்ளவேண்டியது. பூமி, ஜலம் இவைகளிலுண்டான புஷ்பம், கிழங்கு, காய், பழம், மணிப்புன்கு முதலான நல்லவிருக்ஷத்தின் பழத்தினாலுண்டான தேன் முதலியவற்றைப்புஜிக்கலாம். ஈயினாற்கட்டப்பட்ட தேன், மாம்ஸம், பூமியிலும் மரத்திலுமுண்டான காளான், பூஸ்தரணம் குருகம் (மாளவதேசத்திலும், பாஹ்லீக தேசத்திலுமுண்டாகிற பதார்த்தங்கள்), அழிஞ்சிற்பழம் இவைகளை நீக்கவேண்டியது. வருஷந்தோறும் ஐப்பசி மாஸத்தில, முன் ஸம்பாதிக்கப்பட்ட உதிர்நெல், கிழிந்ததுணி, முதல் நாள் ஸம்பாதித்த காய் கிழங்கு பழம் இவைகளை முற்றிலும் தள்ளவேண்டியது. காட்டில் உழுதபூமியில் விளைந்த நெல்லானது பயிரிட்டவனால் ஒதுக்கப்பட்டிருந்தாலும் அதைத்தான் க்ரஹிக்கக்கூடாது. ஊரில் உழாதபூமியில் காய், கிழங்கு, பழம், பயிராலும் அவைகளைத் தனக்குத்துன்பம் நேரிட்டிருந்தபோதிலும் புஜிக்கக்கூடாது. காய், கிழங்கு முதலானவைகளை நெருப்பிற் பாகஞ்செய்தாவது, தானே பழுத்தபின்பு கல்லினால் நறுக்கியாவது, பற்களால் கடித்தாவது புஜிக்கலாம். தனக்குபயோகமான ஆஹாரத்தைத்தினந்தோறுமாவது, ஒரு மாஸத்திற்காவது, ஆறுமாஸத்திற்காவது, ஒரு வருஷத்திற்காவது ஸம்பாதித்துக்கொள்ளலாம். மேற்சொன்ன ஆஹாரங்களைத் தன்சக்திக்குத்தக்கபடி ஸம்பாதித்து, இரவிலாவது பகலில் நாலாவதுபாகத்திலாவது ஒருநாளுபவாஸமிருந்து மறுநாள ஸாயங்காலமாவது, மூன்றுநாள் உபவாஸமிருந்து நாலாவதுநாள் சாயங்காலமாவது தன் சக்திக்குத்தக்கபடி புஜிக்கலாம். இல்லாவிட்டால கிருஷ்ணபக்ஷத்திலும் சுக்லபக்ஷத்திலும் சாந்த்ராயணவ்ரதத்தினாலாவது காலத்தைப்போக்கவேண்டியது; அல்லது பதினைந்துநாள்களுக்கொருதடவை சுடுகஞ்சியை ஒருவேளையாயினும் இரண்டுவேளையாயினும் புஜிக்கலாம. அல்லது வானப்ரஸ்தாச்ரமநியமப்படி மரத்தில் தானாகப்பழுத்த பழங்களினாலும், தானாகவுதிர்ந்த புஷ்பங்களினாலும், தானாகவுலர்ந்த கொடியுள்ள கிழங்குகளினாலும், வ்ரதத்தைக் கெடுக்காமல தினந்தோறும் ஜீவிக்கலாம்.

எப்படியாவது விஷயவிச்சையை யடக்கவேண்டியது. களைத்திருந்தால் பரிசுத்தமான பூமியில படுத்துக்கொண்டு புரளலாம்; ஆஸனத்தில் உட்கார்ந்துகொண்டாவதிருக்கலாம்; அல்லது உலாவினாலுமுலாவலாம். நாள்தோறும் த்ரிகாலத்திலும ஸ்நாநம்செய்யவேண்டியது. தனது தபஸ் க்ரமமாக விருத்தி

யாகும்பொருட்டு வெயில்காலத்தில் பஞ்சாக்னிமத்தியிலிருந்துகொண்டும், மழைக்காலத்தில் மழையிலிருந்துகொண்டும், பனிக்காலத்தில் ஈரவஸ்த்ரத்தைப் போர்த்துக்கொண்டும் தபஸ்செய்யவேண்டியது. தினந்தோறும் த்ரிகாலத்திலும் ஸ்நாநஞ்செய்து, தேவர்ஷிபித்ருதர்ப்பணஞ்செய்யவேண்டியது. பக்ஷோபவாஸம், மாஸோபவாஸங்களால் தேஹத்தையொடுக்கவேண்டியது. இந்தப்படி ஆறுமாஸங்களானபின்பு, வேதத்திற்சொல்லிய மூன்றக்னிகளையும் தன்தேஹத்தில் ஸமாரோபணஞ்செய்து, வீடில்லாதவனாயும், அக்னிஹோத்ரமில்லாதவனாயும், பழமுதலானவற்றைப் புஜித்துக்கொண்டு மரத்தின் கீழே மௌனமாய் வஸித்தாலும் வஸிக்கலாம்.

நல்லபழம் சாப்பிடவேண்டுமென்றும் குளிர்வெயில் இல்லாமலிருக்கவேண்டுமென்றும் தோற்றுகிற ஸுகத்தில் விருப்பமில்லாதவனாயும், ஸ்த்ரீஸம்பந்தமில்லாதவனாயும், தரையிற் படுக்கிறவனாயும், நேர்ந்த மரத்தடியில் மமதையின்றி வாஸஞ்செய்யவேண்டியது. காய்கிழங்கு முதலியவை அகப்படாவிட்டால் வானப்ரஸ்தப்ராஹ்மணர்களிடத்திலும், அவர்களில்லாவிட்டால் வனவாஸஞ்செய்கிற கிருஹஸ்தர்களிடத்திலும், தன் ப்ராணதாரத்திற்கு உபயோகமானமட்டில் பிக்ஷையெடுக்கவேண்டியது. அவர்களுமில்லாதபோது ஊரிற்போய் இரண்டுகைகளிலாவது, மரப்பாத்ரத்தொன்னையிலாவது எட்டுக்கவளங்களைவாங்கிப்புசிக்கவேண்டியது. இப்போது சொல்லிவந்த வ்ரதங்களையும் அனுஷ்டித்துக்கொண்டு, தான் நற்கதியையடையும்பொருட்டு உபநிஷத், வேதாந்தம் முதலியவைகளால் ப்ராஹ்மத்தை த்யானித்துக்கொண்டிருக்கவேண்டியது. ரிஷி, ஸந்யாஸி, கிருஹஸ்தன, ப்ராஹ்மசாரி இவர்களால் தன்தன் வித்யை தபஸ் விருத்தியாவதற்காகவும், சரீரசுத்திக்காவும், மேற்சொன்ன உபநிஷத முதலிய வேதாந்தங்கள் ஓதப்படுகின்றன. அதிக வயஸானபின்பு, ஈசாந்யதிக்கில், பரிசுத்தனாய், தன் தேஹம் அழிகிறவரையில், ஜலத்தையும் காற்றையும் புஜித்துக்கொண்டு மஹாப்ரஸ்தானமாயும் போகலாம். இந்தப்படி சொல்லிவந்த மஹாமுனியின் வ்ரதத்தில் எதையாவதொன்றை அனுஷ்டித்துத் தன் சரீரத்தைவிடுகிறவன், பயம, துக்கமில்லாதவனாய் ப்ராஹ்மலோகத்தில மேலான ஸுகத்தையடைவான். இப்படி காட்டில் தன்னாயுவின் மூன்றுபாகத்தைக் கழித்து, நாலாவது பாகத்தில் ஆசையொழித்தபின், ஸம்ஸாரஸம்பந்தங்களை முற்றிலுந்துறந்து ஸந்யாஸாச்ரமத்தை அடையவேண்டியது.

**ஸந்யாஸதர்மம்.** ப்ரஹ்மசர்ய ஆச்ரமத்திலிருந்து க்ருஹஸ்தாச்ரமத்தையும், அதிலிருந்து வானப்ரஸ்தாச்ரமத்தையும் அடைந்து, அந்தந்த ஆச்ரமத்திற் செய்யவேண்டிய ஹோமம், பலி, பிக்ஷைபோடுவது முதலியவைகளைச்செய்து, அவற்றால் இளைப்படைந்தவனாய், அவைகளை நீக்கி ஸந்யாஸஞ்செய்துகொண்டால் மேலான ஸுகத்தையடைவான். ரிஷிகள், பிதிருக்கள், தேவர்கள் இவர்களுக்குக் கடன்காரனாகாமல் ஸன்யாஸத்தில் மனஸ்ஸைவைக்க வேண்டியது. இல்லாவிட்டால் நரகத்தையடைவான். தேவர்கள், ரிஷிகள், பிதிருக்களிடத்தில் மூன்றுகடன்களுடன் மனிதன் பிறக்கிறான். அவைகளில யக்ஞத்தால் தேவர்களுக்கும், புத்ரோத்பத்தியால் பிதிருக்களுக்கும், வேதமோதுவதால் ரிஷிகளுக்குங் கடனைத்தீர்த்து ஜோதிஷ்டோமம் முதலிய யாகங்களையும் சக்திக்குத்தக்கபடி செய்து, பின்பு மோக்ஷத்திற்குபயோகமான ஸன்யாஸத்தில் மனஸ்வைக்கவேண்டியது. வேதமோதாமலும், புத்ரனைப்பெறாமலும், யாகஞ்செய்யாமலும், மோக்ஷத்திற்கு முயற்சிசெய்கிறவன் நரகத்தையடைவான். யஜுர்வேதத்தில் சொல்லிய எல்லாப்பொருள்களையும தக்ஷிணையாகவுடைய ப்ராஜாபத்ய இஷ்டியைச்செய்து, அக்னியை ஆத்மஸமாரோபணஞ்செய்துகொண்டு, க்ருஹஸ்தாச்ரமத்திலிருந்தே ஸன்யாஸஞ்செய்துகொள்ளலாம். எவன் ஸகல ப்ராணிகளையும் பயப்படுத்தாமல் க்ருஹஸ்தாச்ரமத்தினின்றும் ஸன்யாஸஞ்செய்துகொள்ளுகிறானோ, அவன் தேஜோரூபமான லோகங்களையடைகிறானென்று தெரிந்தவர்கள் சொல்லுகிறார்கள். எவனிடத்திலிருந்து ஒரு ப்ராணிக்கும் சிறிதும் பயமுண்டாகவில்லையோ, அவனுக்கு இறந்தபின் ஒருவரிடத்திலும் பயமில்லை.

ஸன்யாஸஞ்செய்துகொண்டவன் பரிசுத்தமான கமண்டலம், தண்டம், பவித்ரம முதலானவற்றை க்ரஹித்துக்கொண்டு, ஒருவரால் கொடுக்கப்பட்டாலும், விஷயபோகங்களில் விருப்பமில்லாதவனாய் மௌனவ்ரதத்தோடிருக்கவேண்டியது. ஒருவருடைய ஸஹாயமின்றி ஏகாகியாய் பரமாத்மாவைச் சிந்திக்கிறவனுக்கு மோக்ஷஸித்தியுண்டாகிறதை கண்டறிந்து, தானுமப்படியே தனியாய் ஸஞ்சரிக்கவேண்டியது; அப்படியிருந்தால் ஒருவருடைய சேர்க்கை பிரிவுகளால் இவனுக்கு ஸுகதுக்கம் நேரிடாது. அக்னியில் யாகஞ்செய்யாதவனாயும், வீடில்லாதவனாயுமிருந்துகொண்டு, நாள்தோறும் பிக்ஷைக்காக க்ராமத்திற் பிரவேசிக்கவேண்டியது. ஒருபொருளிலும் விருப்பமில்லாதவனாயும், ரோகநிவர்த்திக்காக ஔஷதஞ்சாப்பிடாதவனாயும், ஸ்திர

புத்தியுள்ளவனாயும், ப்ரஹ்மசிந்தனையுடையவனாயும் இரவும் பகலும் காட்டில் வஸிக்கவேண்டியது. மண்பாத்ரம் வைத்துக்கொள்ளுதல், மரத்தினடியில் வஸித்தல், கந்தைத்துணியையுடுத்தல், ஏகாகியாயிருத்தல், சத்ருமித்ரர்களின்றி எல்லோரையும் ஸமமாய்ப்பார்த்தல் இவையெல்லாம் மோக்ஷத்தை விரும்பினவனுக்கடையாளங்கள். தான் ஜீவித்திருப்பதையும் இறப்பதையும் பற்றி ஸந்தோஷிக்கக்கூடாது. வேலைக்காரன் தனக்கு யஜமானன் சம்பளங்கொடுக்கிற நாளை எதிர்பார்த்திருக்கிறதுபோல தன் தேஹத்தின் நாசகாலத்தை எதிர்ப்பார்த்திருக்கவேண்டியது. நடக்கும்போது பூமியைக் கண்ணால்பார்த்துக் காலெடுத்துவைக்கவேண்டியது. தண்ணீரைத் துணியால் வடிக்கட்டிக்குடிக்கவேண்டியது. உண்மையைப் பேசவேண்டியது. அந்தராத்மாவுக்கு ஸந்தோஷமான கார்யத்தைச்செய்யவேண்டியது. ஒருவன் அக்ரமமாகத் தன்னைத்திட்டினாலும் அதைப்பொறுக்கவேண்டியது. ஒருவனையும் தான் அவமானஞ்செய்யக்கூடாது. அநித்யமாயும் ரோகத்துக்கிருப்பிடமாயுமிருக்கிற இந்தத்தேஹத்தைக்குறித்து ஒருவனுடனும் விரோதிக்கக்கூடாது. தன்னையொருவன் கோபித்தாலும் தான் கோபிக்கலாகாது. ஒருவன் திட்டினாலும் தான் சாந்தமாகப்பேசவேண்டியது. பஞ்சேந்த்ரியம், மனஸ், புத்தி இந்த ஏழினாலும் அறியப்பட்ட உலகவ்யவஹாரத்தையும், அழிவுள்ள தர்மார்த்தகாமவிஷயமான வார்த்தையையும் பேசக்கூடாது. ப்ரஹ்மஜ்ஞானியாயும், தண்டகாஷாயங்களிலும் அதிகவிருப்பமில்லாதவனாயும், யோகாஸனமுள்ளவனாயும், விஷயஸம்பந்தமில்லாதவனாயும், தன் தேஹத்தைமாத்ரம் ஸஹாயமாக வைத்துக்கொண்டு மோக்ஷத்தை விரும்புகிறவனாயும் உலகத்தில் ஸஞ்சரிக்கவேண்டியது. பூகம்பத்தைச் சொல்லுகிற சாஸ்த்ரம், கண்துடித்தல் முதலானவற்றைச் சொல்லும் நிமித்தசாஸ்த்ரம், வைத்யம், ஜ்யோதிஷம், தர்க்கம் இவைகளைச் சொல்லிப்பிக்ஷைஸம்பாதிக்கக்கூடாது. ஒரு வீட்டில் ப்ரஹ்மசாரி, வானப்ரஸ்தன் இவர்கள் பிக்ஷைக்கு வந்திருக்கும்போதும், பக்ஷி, நாய் இவைகள் தின்றுகொண்டிருக்கும்போதும், அங்கே தான் பிக்ஷைக்குப்போகக்கூடாது. தலைமயிர், நகம், மீசை இவைகளை க்ஷவரம் செய்துகொண்டு, கமண்டலம், த்ரிதண்டம், தர்ப்பை, காஷாயம் இவைகளைத்தரித்துக்கொண்டு, யாரையும் துன்பப்படுத்தாமல் ஜிதேந்த்ரியனாய் ஓரிடத்திலும் நிலைபெற்றிராமல் தேசஸஞ்சாரஞ்செய்யவேண்டியது. ஸுவர்ணம், வெள்ளி, தாம்ரம் இவைமுதலான லோஹ

பாத்ரங்களை நீக்கி, ஓட்டையில்லாத மண், மரம், இந்தப் பாத்ரங்களை எடுத்துக்கொள்ளவேண்டியது. அவைகளை யாகபாத்ரங்களைப்போல மண்ணுலுந்தண்ணீராலும் சுத்திசெய்யவேண்டியது. தேங்காய்ப்பாத்ரம், சுரைக்காய், மரப்பாத்ரம், தொன்னை, மண் பாத்ரம், மூங்கிற்படி இவைகளை ஸந்யாஸியின் பாத்ரங்களென்று ஸ்வாயம்புவமனு சொல்லியிருக்கிறார். ஒரு வேளை பிக்ஷை யெடுக்கவேண்டியது. அதையும் அதிகமாக எடுக்கக்கூடாது. ஸன்யாஸி, அதிக பிக்ஷையெடுத்துப் புஜித்தால் ஸ்த்ரீ முதலிய விஷயத்திலும் ஸம்பந்தப்படுவான். புகையில்லாமலும், உலக்கைச்சப்தமில்லாமலும், அடுப்பெரியாமலும், அதிதிகள் சாப்பிடப்பட்டுமிருக்கிற க்ருஹஸ்தன்வீட்டில் ஸன்யாஸி பிக்ஷக்குப் போகவேண்டியது. பிக்ஷையகப்படாவிட்டால் வ்யஸனமுள்ளவனையும், அகப்பட்டால் ஸந்தோஷமுள்ளவனுமயிராமல், ப்ராணனைமாத்ரம் காப்பாற்றுகிறவனுய்ப், பரமாணுவளவிலும் ஆசையில்லாதவனுயிருக்கவேண்டியது. தன்னையொருவன் பூஜித்துப் பிக்ஷைகொடுத்தால் அதைத் தான் தடுக்கவேண்டியது. அந்தப் பூஜையில் ஸந்யாஸி விருப்பங்கொண்டால் மோக்ஷமடையும் ஸமயமாயிருந்தாலும் ஜன்மாந்த்ரத்தையடைவான்.

கொஞ்சமாகப்புஜிப்பதினுலும், ஏகாந்தத்தில் வஸித்தலாலும், விஷயங்களாலிழுக்கப்படுகிற இந்த்ரியங்களை நல்லவழியில் திருப்பவேண்டியது. இந்த்ரியநிக்ரஹத்தாலும், ராகத்வேஷமில்லாமையாலும், ஜந்துஹிம்ஸைசெய்யாமையாலும் மோக்ஷமடைகிறதற்கு யோக்யனுவான். இந்த்ரியநிக்ரஹமில்லாத மனிதர்களுக்குப் பாபகர்மத்தினுல் வரும் பசுமுதலிய பிறப்பையும், நரகத்தில் விழுவதையும், யமலோகத்திலுண்டான யாதனையையும் சொல்லுகிற சாஸ்த்ரத்தைப்பார்க்கவேண்டியது. மேலும் இஷ்டர்களைவிட்டுப் பிரிதலையும், சத்ருக்களோடு பழகுதலையும், கிழத்தனத்தாலும வ்யாதியினுலும் வருந்துன்பத்தையும், இந்தத் தேஹத்தை விடும்போது கபம்முதலானவைகளாலுண்டான மரணவஸ்தையையும், மறுபடி கர்ப்பவாஸத்தையும், இவனுத்மா காய் முதலிய அனேகம் பாபயோநிகளில் ஜனிப்பதையும் யோசிக்கவேண்டியது. பின்னும் அதர்மஞ்செய்வதினுல் ப்ராணிகளுக்கு வருந்துன்பத்தையும், ப்ரஹ்மஞானத்தினுலுண்டான அழிவற்ற மோக்ஷஸுகத்தையும், பரமாத்மா ஸர்வாந்தர்யாமியாய் உயர்ந்தவர்களிடத்திலும் தாழ்ந்தவர்களிடத்திலும் ஸூக்ஷ்மரூபமாக ப்ரவேசித்து அவரவர்களுக்கு ஸுகதுக்கங்களைக் கொடுத்துக்கொண்டிருக்கிறதையும், ஞானதிருஷ்டியினுல் யோசிக்கவேண்டியது.

ஒருவன் ஒரு ஆச்ரமத்திலிருந்து அந்த ஆச்ரமத்துக்குத்தக்க தண்டகமண்டலமுதலிய அடையாளங்கள் இல்லாமலிருந்தாலும், எல்லாப்ராணிகளிடத்திலும் ஸமபுத்தியுடையவனாய்த் தர்மஞ் செய்யவேண்டியதேயன்றி, காஷாயந்தரித்தல் முதலிய வேஷம் மாத்ரந் தர்மத்துக்குக் காரணமாகமாட்டாது. அதெப்படியென்றால், தேத்தாங்கொட்டை எப்படியும் தண்ணீரைத் தெளிவிக்கிறது. ஆனாலும் அதைத் தண்ணீரில் தேய்க்காமல் பெயரைச் சொன்னதினால் தண்ணீர் தெளியுமா? இரவிலும், பகலிலும், மற்ற வேளையிலும் தன் ப்ராணன்போகிற ஸமயமாயிருந்தாலும், பூமியை நன்றாகப்பார்த்து ஒரு ஜந்துவும் துன்பப்படாமலிருக்கும்படி நடக்கவேண்டியது. தனக்குத் தெரியாமல் ஏதாவது ஒரு ஜந்து இறந்துபோகிறதினாலுண்டான பாபம் போகிறதற்காக ஸ்நானஞ்செய்தவுடனே ஆறு ப்ராணாயாமங்களைச் செய்யவேண்டியது. ப்ராஹ்மணன், வ்யாஹ்ருதி காயத்ரி ப்ரணவம் இவைகளோடுகூடிய ப்ராணாயாமத்தை மூன்றுதரம் செய்தாலும் அதுவே அவனுக்கு உயர்ந்த தபஸுக்கு ஸரி. ஸுவர்ணம் முதலானவையின் அழுக்கு, நெருப்பிற் காய்ச்சினால் எப்படிப்போய்விடுமோ, அப்படியே தேஹத்தைச்சார்ந்த இந்த்ரியதோஷங்களெல்லாம் ப்ராணாயாமத்தால் போய்விடும். ப்ராணாயாமத்தினால் இந்த்ரியதோஷங்களையும், பரமாத்மாவினிடத்தில் மனஸை வைப்பதினால் ப்ராரப்தகர்மத்தையும், இந்த்ரியநிக்ரஹத்தால் விஷயஸம்பந்தங்களையும், ப்ரஹ்மத்யானத்தினால் காமக்ரோதங்களையும் போக்கடிக்கவேண்டியது. சாஸ்த்ரப்படியாதவர்களால் காணக்கூடாத ஜீவாத்மாவினுடைய தேவமனுஷ்யபசுமுதலிய யோநிப்ரவேசத்தைத்தான் த்யானத்தினாலறிந்து ப்ரஹ்மநிஷ்டனாயிருக்கவேண்டியது. ப்ரஹ்மஸாக்ஷாத்காரஞ் செய்தவனுக்குக் கர்மபந்தம் வரமாட்டாது. அதாவது, ஜனனமரணரூபமான ஸம்ஸாரசக்ரத்தில் துன்பப்படமாட்டான். ப்ரஹ்மத்யானமில்லாவிட்டால் மறுபடி ஜனனமரணத்தையடைகிறான். ஹிம்ஸை செய்யாமையாலும், இந்த்ரியங்களுக்கு விஷயப்பற்றில்லாமையாலும், நித்யகர்மானுஷ்டானஞ்செய்வதாலும், சாந்த்ராயணாதி வ்ரதங்களைச்செய்வதினாலும் பெரியோர்களிவ்வுலகத்தில் மோக்ஷத்தை ஸாதிக்கிறார்கள். தூண்போன்ற எலும்பையும் கயிறுபோன்ற நரம்பையும் மாம்ஸம் இரக்தம் இவைகளாகிற பூசையும் தோலாகிற போர்வையையுமுடையதாய், மலமூத்ரங்களினால் பூர்ணமாய், துர்க்கந்தமுள்ளதாய், கிழத்தனம் துக்கம் நோய் இவைகளால் வாஸஞ்செய்யப்பட்டுப், பசி தாஹம் குளிர்

கானல் இவைகளினால் பயத்தையுண்டுபண்ணுகிறதாய், பெரும்பாலும் ரஜோகுணமுள்ளதாய், பஞ்சபூதங்களுக்கிருப்பிடமாய், ஸ்திரமில்லாததாயிருக்கிற இந்தச்சரீரமாகிற வீட்டை இவனாத்மா மறுபடியடையாமலிருக்கும்படி செய்யவேண்டியது. ஆற்றங்கரையிலிருக்கிற விருக்ஷத்திற்கு ஆற்றின் நீரினால் நாசம் வருவதுபோல், கர்மயோகஞ்செய்கிறவனுக்கு ப்ராரப்தகர்மம் ஒழிந்தவுடனே மோக்ஷமுண்டாகிறது. பக்ஷியானது தான் வாஸஞ்செய்கிற மரத்தைத்தானே விடுவதுபோல் ஞானயோகஞ்செய்கிறவன் தனக்கிஷ்டமானபோது பீஷ்மாதிகளைப்போல் தேஹத்தைவிடுகிறான். இவனுக்கு ஸம்ஸாரமாகிற முதலையினால் பயம் நேரிடுகிறதில்லை; அதாவது மறுபிறப்பில்லை. ப்ரமக்ஞானியானவன் தன்னிஷ்டர்களிடத்தில் தன்புண்யத்தையும், தன் த்வேஷிகளிடத்தில் தன்பாபத்தையும் விட்டுவிட்டு, அழிவற்ற ப்ரஹ்மானந்தத்தையடைகிறான். எப்போது ப்ரஹ்மத்யானத்தால் தோஷத்தையேயுண்டுபண்ணுகிறதான ஸகலவிஷயங்களிலும் ஆசையை நீக்குகிறானோ, அப்போது இம்மையிலும் மறுமையிலும் அழிவற்ற ஸுகத்தையடைவான். ஸகலபுத்ரமித்ராதிஸம்ஸாரஸம்பந்தங்களில் மெல்லமெல்ல மமதையை நீக்கி, மானாவமானம்முதலிய வ்பாதியினின்றும் நீங்கியிருக்கிறவன், ஞானயோகம் அல்லது கர்மயோகத்தால் ப்ரஹ்மஸாயுஜ்யத்தையடைகிறான். மேற்சொன்ன மமதையைவிடுகிறது முதலானவையெல்லாம் ப்ரஹ்மத்யானஞ் செய்பவனுக்குமாத்ரம் பலனைகொடுக்குமேகவிர, ஆத்மத்யானமில்லாதவனுக்கு ஒருகர்மமும் பலனைக்கொடுக்காது. அதியஜ்ஞம், அதிதைவம், அத்யாத்மம் என்று சொல்லப்பட்ட ப்ரஹ்மஸ்வரூபத்தை இந்த ஸன்யாஸி வேதாந்தவாக்யத்தால் எப்போதும் த்யானிக்கவேண்டியது. வேதாந்தமானது அதன் பொருளைத் தெரியாமலோதுகிறவனையும் காப்பாற்றுகிறது. அதன் பொருளையறிந்தவர்களை விசேஷமாய்க்காப்பாற்றுகிறது. கைவல்யத்தை விரும்புகிறவர்களுக்கும், மோக்ஷத்தை விரும்புகிறவர்களுக்கும் இதுதான் கதியாகயிருக்கிறது. இந்த விதிப்படி எந்தத்விஜன் ஸன்யாஸஞ்செய்துகொள்ளுகிறானோ அவன் ஸகல பாபங்களையும் இம்மையிலேயே நீக்கிவிட்டு மேலான ப்ரஹ்மஸ்வரூபத்தையடைகிறான். இதுவரையில் மஹாத்மாக்களான ஸன்யாஸிகளின் பொதுவான தர்மங்கள் சொல்லப்பட்டன. இனி வேதத்திற்சொல்லிய கர்மங்களைச்செய்துகொண்டு ஸம்ஸாரஸம்பந்தமில்லாமல் வீட்டிலேயே வஸிக்கிற ஸன்யாஸியின் தர்மம் சொல்லப்படும்.

ஸந்தோஷம், தனக்கொருவனபகாரஞ்செய்தாலும் பதில் செய்யாமை, மனஸையடக்குதல், அங்யாயமாய்ப் பொருள் தேடாமை, நல்லொழுக்கம், இந்த்ரியங்களை ஜயித்தல், சாஸ்த்ரக்ஞானம், ப்ரஹ்மக்ஞானம், உண்மை, கோபமில்லாமை என்ற பத்துவிததர்மங்களை எவர்களறிந்து அந்தப்படி நடத்துகிறார்களோ அவர்கள் மேலான மோக்ஷத்தையடைகிறார்கள். இவைகளை அநுஷ்டித்து இந்த்ரியநிக்ரஹமுள்ளவனாயிருக்கிற கிருஹஸ்தன், மூக்கடனையுந்தீர்த்துப் பின்பு வேதாந்தார்த்தங்களைக் குருவினிடத்தில் கேட்டு ஸந்யாஸஞ்செய்துகொள்ளவேண்டியது. கிருஹஸ்தாச்ரமத்திற்செய்யத்தக்க ஸகலகர்மங்களையும் நீக்கிவிட்டு, ப்ராணாயாமமுதலானவற்றால் தனக்கு அக்ஞானகிருதமான பாபங்களையும் போக்கடித்துப் பரிசுத்தனாய் வேதாந்தத்தையோதிக்கொண்டு, புத்ரனிடத்திலேயே வஸ்த்ரம் பிக்ஷை இவைகளை வாங்கிக்கொண்டு ஸுகமாக வாஸஞ்செய்யலாம். இதுதான் குடீசாமென்னும் ஸந்யாஸிபேதத்தின் தர்மம். இந்தப்ரகாரம் ஸமஸ்தகர்மங்களையும் நீக்கிவிடடுத் தான் நற்கதியையடையும்பொருட்டு முயற்சியுள்ளவனாய், ஒன்றிலும் பற்றில்லாதவனாய் ஸந்யாஸஞ்செய்துகொள்ளுகிறவன், பாபத்தைபபோககடித்து மேலான கதியையடைகிறான்.—(மனுஸ்மிருதி. 5, 6.)

பக்கம் 2, வரி 1. ப்ரஹ்மா: மஹாவிஷ்ணுவின் நாபியிலிருந்துண்டான தாமரைபபுஷ்பத்திலுதித்தவர். த்ரிமூர்த்திகளிலொருவர். ஸிருஷ்டிகர்த்தா. பதினாலுலோகங்களடங்கிய ஒரு ப்ரஹ்மாண்டத்திற்கதிபதி. இவருடைய ஆயுஷ்ப்ரமாணம, நூறு ப்ரஹ்மவர்ஷங்கள் =311,040,000,000,000 சாந்த்ரமானவர்ஷங்கள். இப்பொழுது அவருக்கு ஐம்பத்தோராவது வர்ஷத்தில், சவேதவராஹகல்பமென்ற முதல் நாளில், ஏழாவதான வைவஸ்வத மன்வந்தரத்தில், இருபத்தெட்டாவது சதுர்யுகத்தில், நானகாவதான கலியுகத்தில், 5,010வதான கலிவர்ஷம் நடக்கின்றது. இவருக்கு ஆதியில் ஐந்து முகங்களும, பிறகு நான்கு முகங்களும் ஏற்பட்டன. வாக்தேவதையான ஸரஸ்வதீ இவருடைய பாரயை; வாஹனம ஹம்ஸபக்ஷி; இருப்பிடம் ஸத்யலோகம்; நகரம் மனோவதி.

மானஸபுத்ரர்கள். ஆதியில் ஸனக ஸனந்தன ஸனாதன ஸனத்குமாரர்களையும; அவர்கள் ஸிருஷ்டிசெய்யாமல் மோக்ஷமார்க்கத்தையனுஷ்டித்ததால், பிறகு தனது மனதிலிருந்து மரீசியையும், நேத்ரங்களிலிருந்து அத்ரியையும், வாயிலிருந்து அங்கிரஸையும், காதுகளிலிருந்து புலஸ்த்யரையும், தொப்புளிலிருந்து

புலஹரையும், கைகளிலிருந்து க்ரதுவையும், தோலிலிருந்து பிருகுவையும், ப்ராணனிலிருந்து வஸிஷ்டரையும், கட்டைவிரலிலிருந்து தக்ஷரையும், வயிற்றிலிருந்து நாரதரையும், வலது மார்பிலிருந்து தர்மத்தையும், முதுகிலிருந்து அதர்மத்தையும், ஹிருதயத்திலிருந்து காமத்தையும், புருவங்களிலிருந்து கோபத்தையும், கீழ் உதட்டிலிருந்து லோபத்தையும், வாயிலிருந்து வாக்கையும், சாயையிலிருந்து கர்த்தமரையும் உண்டாக்கினர்.—(பாகவதம் 3, 12.)

வரி. 2. நாரதர்.—ப்ரஹ்மாவின் வயிற்றிலிருந்துண்டான மானஸ புத்திரர்.—(பாகவதம் 3, 12.)

இவர் முதலில் கந்தர்வனயிருந்து, பிறகு சூத்ரனய்ப் பிறகு ப்ரஹ்மபுத்ரரானர்.—(ஷை 6, 7.)

மத்ஸ்யபுராணம், மனுஸ்மிருதி இவைகளில், இவரைப் பத்தாவது ப்ராஜபதியாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

ப்ரஹ்மகைவர்த்தபுராணத்தில், இவர், ஹரியசவர்களையும் சபலாச்வர்களையும், ப்ரஜாவிருத்திசெய்யவொட்டாமல் அவர்க்கு மோக்ஷமார்க்கத்தையுபதேசித்ததால், ப்ரஹ்மாவால் கந்தர்வர்களுக்குத் தலைவனுகும்படி சபிக்கப்பட்டார். ப்ரஹ்மபுராணம், ஹரிவம்சம், வாயுபுராணம் இவைகளில் இவர் தக்ஷனல் சபிக்கப்படும் ஸமயத்தில் ப்ரஹ்மா கேட்டுக்கொண்டதால், கச்யபருக்கும் தக்ஷனுடைய பெண்களிலொருத்திக்கும் புத்ரனகப் பிறந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

வாயுபுராணத்தில் மற்றேரிடத்தில், கச்யபர் இவரை ஸ்வீகாரம் செய்துகொண்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

ப்ரஹ்மபுராணத்திலும், ஹரிவம்சத்திலும், கார்த்தவீர்யசரித்ரத்தில், இவர் ஹரிதாஸன் என்ற கந்தர்வனுடைய புத்ரனென்றும், ஹரிவம்சவ்யாக்யானத்தில் இவர் உபபர்ஹணன் என்றகந்தர்வனென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

இவர் வீணகானத்தில வல்லமையடைந்து, சில ப்ராஹ்மணர்கள் செய்யும் யாகத்திற்கு அவர்களுடைய ப்ரார்த்தனையால் சென்று வீணகானம் செய்தார். அங்கிருந்த சிலஸ்த்ரீகளைச் [illegible], அது தெரிந்த ப்ராஹ்மணர்கள் இவரைச சூத்ரகுலத்திற்பிறக்கும்படி சபித்தார்கள். பிறகு பூர்வஜன்மவாஸனையால் மஹாத்மாக்களுக்குச் சுச்ரூஷைசெய்து, அந்தப்புண்[illegible]ால் ப்ரஹ்மாவுக்கு மானஸபுத்ரராய்ப் பிறந்தார்.

நாரதரும் அவருடைய ஸஹோதரியின் புத்ரனான பர்வதரும், "நம்முடைய மனதில் சுபமோ அசுபமோ, எந்த எண்ணமுண்டானாலும் அதை மற்றொருவரிடத்திலிருந்து ஒளிக்கிறதில்லை" என்று ப்ரதிக்ஞை செய்துகொண்டு பூலோகத்தில் ஸஞ்சரித்தார்கள்.—(பாரதம், சாந்திபர்வம், ராஜதாமம் 30.)

இவர் இந்த்ரஸதஸிலிருப்பவர்.—(ஷை ஸபாபர்வம்.)

இவர் இதிஹாஸங்கள், புராணங்கள், வேதாங்கங்கள், பூர்வகல்பங்களின் விசேஷங்கள், தர்மத்தின் உண்மை, இவைகளை நன்றாயறிந்தவர். பதினான்கு லோகங்களின் ஸகல பாகங்களையும் நேரில் பார்த்தவர். ஸந்தி, விக்ரஹம் முதலிய ஆறு ராஜ நீதிவிபாகங்களில் ஸமர்த்தர். பதினெட்டு வித்யைகளும், ஸகலகலைகளும் வஸிக்குமிடம். மென்மேலும் யுக்தியாயப்பேசுவதில் ப்ருஹஸ்பதியைவிட மேலானவர். தேவகணங்களால் பூஜிக்கப்பட்டவர். ஸங்கீதம், பரதம் இவைகளில் சிறந்தவர்.—(ஷை 5.)

பொறுமை, சௌர்யம், ஸத்யம், தேஜஸ், கீர்த்தி, புத்தி, வணக்கம், நல்லறிவு, உத்தமகுலம், தபஸ் இவைகளால் அலங்கரிக்கப்பட்டவர். கோபம், பயம், காமம் முதலிய குறைகளற்றவர். இந்த்ரியங்களை ஜயித்தவர். வேதாந்தரஹஸ்யத்தையறிந்தவர். சுத்தமான நடத்தையும் ஸுகமான வார்த்தையுமுள்ளவர். பாபஸம்பந்தமில்லாதவர். புண்யத்தையே செய்பவர். எல்லாரிடத்திலும் ஸமபுத்தியுள்ளவர். அவருக்கு விரோதியுமில்லை, மித்ரனுமில்லை. ஒன்றிலும் பற்றில்லாதவர். பற்றுள்ளவர்போலிருப்பவர். ஸந்தேஹமற்றவர். தன்னைத்தான் புகழாதவர். வேததர்மங்களைத் தவறாமல் அனுஷ்டிப்பவர். எப்பொழுதும் ஸமாதியிலேயே ப்ரியமுள்ளவர். பெரியோர்களிடம் சாஸ்த்ரங்களை அப்யஸித்தவர். ஜனங்களுடைய எண்ணங்களையறிந்தும், அவர்களிடம் வெறுப்படையாதவர். இவ்வளவு உத்தமகுணங்கள் பொருந்தியிருந்தாலும் அஹங்காரமில்லாதவர். மேற்சொல்லிய காரணங்களால் ஸகலலோகங்களிலும் பூஜிக்கப்படுகிறார்.—(ஷை சாந்திபர்வம் 230.)

ஷை ஆதிபர்வம் 132-ல் நாரதரைத் தும்புருவுடன் கந்தர்வகணங்களில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

வா-ரா. 2-91-ல் நாரதர், தும்புரு, கோபன் முதலிய கந்தர்வர்கள், பரத்வாஜர்செய்த விருந்திற்குவந்து கானம்செய்ததாகச்சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் பர்வதநாரதர்களில் ஒருவரான நாரதரும், தும்புருநாரதர்களில் ஒருவரான நாரதரும் வேறாயிருக்க[illegible]. இவருடைய பூர்வஜன்மங்களை பின்வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது.

"சென்றகல்பத்தில், நான் சில மஹர்ஷிகளுக்குப் பணிவிடை செய்யும் ஒரு வேலைக்காரிக்குப் புத்ரனாகப்பிறந்தேன். ஒரு ஸமயத்தில், சில யோகிகள் வர்ஷகாலத்தில் ஓரிடத்தில் தங்கியிருந்தபொழுது, அவர்களுக்குச்சுச்ரூஷைசெய்யும்படி பாலனான என்னை நியமித்தார்கள். சிறுவனாயிருந்தும், சஞ்சலஸ்வபாவமில்லாமல், இந்த்ரியங்களை ஜயித்தவனாய், மற்ற பாலர்களைப் போல் விளையாடுவதைவிட்டு, அதிகமாய்ப்பேசாமல், மிகவும் பக்தியுடன் அவர்களுக்கு நான் உபசாரம் செய்வதைக்கண்டு, எல்லா வஸ்துக்களிடத்திலும் ஸமதிருஷ்டியுள்ள அந்த யோகிகள் என்னிடத்தில் கிருபைவைத்து, அவர்களுடைய அன்னசேஷத்தைப்புஜிக்கும்படி அனுமதி கொடுத்தார்கள். உடனே என் மனஸிலுள்ள தோஷங்களெல்லாம் நீங்கி அவர்கள் அனுஷ்டித்துவந்த தர்மத்தில் ஆசையுண்டாயிற்று. அவர்களுடைய கிருபையால் கிருஷ்ணபரமாத்மாவினுடைய திவ்யசரித்ரங்களை அவர்கள் கானஞ்செய்யக்கேட்டுப், பகவானிடத்தில் விசேஷபக்தியும், ப்ரேமையும் அதிகரித்தன. அந்தப்ரேமையால் அவருடைய ஸ்வரூபத்திலேயே எனது மனஸ் நாடி, என்னுடைய ஸ்தூலஸூக்ஷ்மதேஹங்களை நித்யமான ஆத்மாவினுடைய அநித்யமான தோற்றங்களென்று கண்டேன். என்னுடைய தீவ்ரபக்தியால், ராஜஸதாமஸதோஷங்கள் சாம்பலாயெரிக்கப்பட்டன.

"வர்ஷகாலம் முடிந்தவுடன் அந்த மஹாத்மாக்கள் அவ்விடம் விட்டுப்போவதற்கு முன்னமே, பகவானால் அவர்களுக்கு உபதேசிக்கப்பட்ட அதிரஹஸ்யமான தத்வத்தை எனக்கு அனுக்ரஹித்தார்கள். அந்த ஞானத்தால் நான் பகவானுடைய மாயாஸ்வரூபத்தையறிந்து, அவருடைய திவ்யலோகத்தை அடையும் ஸாதனத்தை அனுஷ்டித்தேன். பிறகு பகவான் எனக்கு ப்ரஸன்னமாய், உத்தமஞானத்தையும், அபூர்வசக்திகளையும் கொடுத்தார்.

சிலகாலத்திற்குப்பிறகு எனது தாய் பாம்புகடித்திறந்தாள். அதைத்தைய்வச்செயலென்று நினைத்து, அவ்விடம் விட்டு வடக்கை நோக்கிச்சென்றேன். அநேக வனங்களையும், நதிகளையும், பர்வதங்களையும் தாண்டி, முடிவில் ஒரு அரண்யத்தில் ஒரு அச்வத்தவிருக்ஷத்தின்கீழ் உட்கார்ந்து, எனது ஆசார்யர்கள் உபதேசித்தபடி இந்த்ரியங்களை அடக்கிக்கொண்டு, பகவத்ஸ்வரூபத்தை த்யானஞ்செய்தேன். பக்திவிசேஷத்தால் என் மனஸடங்கி, ஆனந்தத்தால் கண்களில் நீர் பெருகி, பகவானுடைய திருவடிகளையே ஸ்மரித்துக்கொண்டிருக்கையில், என்னுடைய

ஹ்ருதயத்தில் அவர் திவ்யமங்களவிக்ரஹத்துடன் தோன்றினார். அவரிடத்திலுள்ள ப்ரேமையால் நான் ஆனந்தத்தில் மூழ்கி ப்ரக்ஞையற்றுப் பரவசமாய் நின்றேன். அப்பொழுது பரமாத்மா என்னைப்பார்த்து, 'காமக்ரோதங்களை முற்றிலும் ஜயிக்காத யோகிகள் என்னைத்தர்சிக்கமுடியாது. நீ இந்த ஜன்மத்தில் என்னைத் தர்சிக்கத்தகாதவனானாலும், உன்னுடைய மனதை என்னிடத்திலேயே ப்ரேமையுடன் நாட்டவேண்டுமென்று உனக்கு உபதேசிப்பதற்காக இப்பொழுது தர்சனங்கொடுத்தேன். என்னிடத்தில் சித்தத்தைச்செலுத்தினவனாது, ப்ரபஞ்சத்தில் வேறொன்றையும் விரும்பான். மஹர்ஷிகளுக்கு வெகுகாலம் நீ சுச்ரூஷைசெய்துவந்தபடியால, உன்னுடைய மனஸ் என்னிடத்தில் லயித்திருக்கிறது. ஆகையால, இந்தக்கர்மசரீரத்தைவிட்டு, எப்பொழுதும் என்னுடன்கூடவிருப்பாய. என்னிடத்தில் சித்தத்தை வைத்தவர்கள், ஸ்ருஷ்டியிலும, ப்ரளயத்திலும் நாசமடைகிறதில்லை. அவர்களுடைய ப்ரக்ஞையும் அழியாது' என்று அனுக்ரஹித்து மறைந்தார்.

"பிறகு பகவானால் க்ருபைசெய்யப்பட்ட சுத்ததேஹத்தையடையுங்காலம் ஸமீபித்தவுடன், எனது ப்ராரப்தகர்மத்தின் முடிவில், பஞ்சபூதங்களால ஏற்பட்ட பூர்வசரீரமானது நாசமடைந்தது. கல்பத்தின் முடிவில், ப்ரஹ்மா யோகநித்ரைசெய்ய ஆரம்பிக்கையில, அவருடைய சுவாஸததால் என்னுடைய தேஹம் இழுக்கப்பட்டது. ஆயிரம்யுகங்களுக்குப்பிறகு ப்ரஹ்மா விழித்துக்கொண்டு, ஸ்ருஷ்டிசெய்ய ஆரம்பித்தபொழுது, நானும் மரீசியும், மற்ற ரிஷிகளும வெளியில் வந்தோம். அதுமுதல நான் ப்ரஹ்மசர்யவ்ரதத்தை அனுஷ்டித்துக்கொண்டு, மஹாவிஷ்ணுவின க்ருபையால், ப்ரஹ்மாண்டத்திலுள்ள லோகங்களில் தடையிலலாமல் ஸஞ்சரித்துக்கொண்டிருக்கிறேன். ஸ்வரப்ரஹ்மத்தால அலங்கரிக்கப்பட்ட இந்த வீணையைத் தேவர்கள் எனக்குக் கொடுத்தார்கள். இதில் ஹரியினுடைய குணங்களை வாசித்துக் கானஞ்செய்துகொண்டு, ஜீவகோடிகளை ஸம்ஸாரஸமுத்ரத்திலிருந்து கரையேற்றுகிறேன்." (பாகவதம் I. 5, 6.)

அதாவது, நாரதர் பூர்வகல்பத்தில் வழங்கிய ப்ரஹ்மஞானத்திற்கு நிதி; இந்தக்கல்பத்தில இவர் ஆதிரிஷி; ஸப்தஸ்வரங்களமைந்த வீணையில் இடைவிடாமல் பகவானுடைய குணங்களைக் கானஞ்செய்துகொண்டிருப்பதால, ப்ரஹ்மவித்யையை ப்ரசாரம் செய்வதே அவருடைய வேலை. அவர் எப்பொழுதும் கர்மநிலையை அனுஸரித்து, ஜீவகோடிகளுக்கும், லோகங்களுக்கும் ஹித

த்தைச்செய்வதிலேயே நோக்கமுள்ளவர்; ஸாஸ்வதீதேவியைப் போல் எப்பொழுதும் வீணையைக் கையில்வைத்துக்கொண்டிருப்பவர் ரிஷிகளுக்குள் இவர் ஒருவரே. தேவர்கள், ரிஷிகள் எல்லோரும் எந்த விஷயத்திலும் இவருடைய ஆலோசனையைக்கேட்டு நடக்கிறார்கள். வால்மீகி, வ்யாஸா முதலிய மஹர்ஷிகளை லோகோபகாரமான க்ரந்தங்களை எழுதும்படி ப்ரயத்னஞ் செய்ததும் இவரே.

இவருடைய பெயரால், பிருஹந்நாரதீயபுராணமென்று ஓர் புராணமும், நாரதஸ்மிருதியென்ற ஓர் ஸ்மிருதியும், நாரதபக்தி ஸூத்ரமென்ற ஓர் பக்திக்ரந்தமும், நாரதீயசிக்ஷை என்று ஓர் வேதாங்கமும் வழங்குகின்றன.

'தேவர்ஷிகளுக்குள் நாரதர் நானே.'—(பகவத்கீதை 10. 26.)

பகவானுடைய இச்சைப்படி :—பகவான், தான் அவதாரஞ் செய்து உபதேசித்த தர்மங்கள் காலாந்தரத்தில மறைந்துபோகுமென்று ப்ரஹ்மாவை ஆக்ஞாபிக்க, அவரும் சதகோடி ராமாயணத்தைச்செய்து, நாரதர் முதலானவர்களுக்குபதேசித்துப பூலோகத்தில் ராமபக்தர்களுக்குள் முக்யரான வால்மீகியின் வழியாய் ஜனங்களுக்குள் பரவச்செய்யவேண்டுமென்கிற எண்ணத்துடன் நாரதரை அவரிடம் அனுப்பினர். அந்தத்தேவர்ஷியும் வேதவாக்யங்களால் ராமசரிதத்தை அவருக்குபதேசித்தார். பிறகு வால்மீகி அதையே நூறுச்லோகங்களால் ஸம்க்ஷேபராமாயணம் அல்லது லகுராமாயணம் என்று செய்தார்.—(கோவிந்தராஜருடைய ராமாயணடீகை : ஆநந்த-மனோஹராகாண்டம் 1.)

வரி 3. காலையில் :—நாரதர் சென்றபிறகு வால்மீகி கொஞ்ச காலம் தனது ஆச்ரமத்திலிருந்துவிட்டு, மாத்யாஹ்நிகஸ்நானஞ் செயவதற்காகத் தமஸாநதிக்கரை சேர்ந்தார்.—(வா-ரா. I. 2.)

தபஸிலும்.—1. சாந்த்ராயணம் முதலிய வ்ரதங்களையனுஷ்டிப்பதிலும, வேதாத்யயனததிலும் ஆசையுள்ளவர். "ப்ராஹ்மணனுக்குத் தபஸும் வித்யையும் விசேஷ க்ஷேமத்தைச்செய்யும். தபஸால் விசேஷ பாபங்களைப்போக்கடித்து, வித்யையால் ஞானத்தையடைகிறான்."—(மனுஸ்மிருதி.)

2. யோகம் (தபஸ்), வேதாத்யயனம் இவைகளில் ஆசையுள்ளவர். "வேதாத்யயனம், யோகம் இவைகளின் பூர்த்தியால் மேலான பதவியையடைகிறான்."—(அபியுக்தர்கள்.)

3. வேதம் (தபஸ்), ஜபம் (ஸ்வாத்யாயம்) இவைகளில் ஆசையுள்ளவர். "வேதாத்யயனஞ் செய்வதிலிருந்து தவருமல் வேதத்தையே எப்பொழுதும் ஜபிக்கவேண்டும்."—(பெரியோர்கள்.)

4. ப்ராஹ்மத்தை (தபஸை) ப்போதிப்பதையே முக்யமாயுள்ள வேதாந்தத்தில் ஆசையுள்ளவர். "வேதத்தை அத்யயனஞ் செய்வதிலும் அதைப் பிறருக்குக்கற்பிப்பதிலும் தவறக்கூடாது" —(ச்ருதி.)

வரி. 6. **கானம்**: முன்காலத்தில் கௌசிகனென்ற ஓர் ப்ராஹ்மணன் கானவித்யையை அப்யாஸஞ்செய்து, அதனுல் மஹாவிஷ்ணுவை ஸந்தோஷப்படுத்த, பகவான் அவன் இறந்தபிறகு அவனை வைகுண்டத்திற்கு வரவழைத்து, அவனையுபசரிப்பதற்காகத் தும்புருமுதலியகந்தர்வர்களைக்கொண்டு கானஞ்செய்வித்தார். நாரதர், பகவானுல் தும்புருவிற்குச்செய்யப்பட்ட உபசாரங்களையும் வெகுமதிகளையும் பார்த்துப் பொருமைகொண்டார்.

பகவானும் "தபஸ், தானம், யாகம் முதலியவைகளால் எனக்குத் திருப்தியில்லை. என்னுடைய நாமங்களையும் குணங்களையும் சாஸ்த்ரமுறைதவருமல கானஞ்செய்பவன் என்னுடைய சாயுஜ்யத்தையடைவான். கௌசிகனென்ற ப்ராஹ்மணனும் தும்புருவும் இதற்குத்திருஷ்டாந்தம். நீயும் எனக்கு ப்ரியனுகவிரும்பினுல் மானஸோத்தரபர்வதத்தில வஸிக்கும் கானபந்துவென்ற ஒருகோட்டானிடத்தில்போய்க் கானவிதயையைக்கற்றுக்கொள்" என்ருர்.

நாரதர் அப்படியே அங்கே சென்று, கந்தர்வர்கள், கின்னரர்கள், யக்ஷர்கள், அப்ஸரஸ்கள் முதலியவர்களால உபசரிக்கப்படும் கானபந்துவைக்கண்டார். அதனிடத்தில தான்வந்தகார்யத்தைத்தெரிவிக்க, அதுவும் அவரைச் சிஷ்யனுக ஒப்புக்கொண்டு, ஆயிரம் தேவவர்ஷங்கள் கானவித்யையை உபதேசித்தது.

பிறகு கானசாஸ்த்ரத்தில் நிபுணராய்க் குருவினிடத்தில் உத்திரவுபெற்றுக்கொண்டு, தும்புருவை ஜயிப்பதற்காக அதிக ஆவலுடன் கந்தர்வலோகம் சென்ருர். தும்புருவின் வீட்டிற்கு ஸமீபத்தில் கை, கால், மூக்கு, மார்பு, தலை, விரல்கள் முதலிய அங்கங்கள் சின்னபின்னமாய்க்கிடக்கும் அநேக ஸ்த்ரீபுருஷர்களைக் கண்டு, "நீங்கள் யாரெ"ன்று கேட்டார். அவர்கள், "நாங்கள் ராகதேவதைகள்; நீ பாடும்பொழுது உண்டாகும் அபஸ்வரங்களால் எங்களுக்கு இத்தக்கதி ஸம்பவிக்கின்றது. பிறகு தும்புரு பாடும்பொழுது எங்களுடைய அங்கங்கள் முன்போல் சேரும்" என்

றன. அதைக்கேட்டு நாரதர் வெட்கமடைந்து, ''சீ! சீ! இதென்னபிழைப்பெ''ன்று, ச்வேதத்வீபத்தில மஹாவிஷ்ணுவிடம் சென்று நடந்த விருத்தாந்தத்தைத்தெரிவித்தார்.

அதற்குப் பகவான், 'நீ கானபந்துவிடத்தில் அப்யஸித்த வித்யையானது ச்ரேஷ்டமானாலும், உன்னைத் தும்புருவிற்கு ஸமமாகச்செய்யாது. வைவஸ்வதமன்வந்தரத்தில் இருபத்தெட்டாவதுசதுர்யுகத்தில், த்வாபரயுகத்தின் முடிவில், யதுவம்சத்தில் அவதாரம்செய்வேன்; அப்பொழுது எனக்கு ஞாபகப்படுத்து. உன்னைத் தும்புருவிற்கு ஸமமான வித்வானாகச்செய்கிறேன். அதுவரையில தேவதைகள், கந்தர்வர்கள் முதலியவர்களிடத்தில் கற்றுக்கொள்'' என்று அனுக்ரஹித்து மறைந்தார்.

பிறகு அந்தத்தேவர்ஷி பகவத்பக்தியுள்ளவராய், விபஞ்சீ என்னும் வீணையைத் தோளில்வைத்துக்கொண்டு, ஸகலலோகங்களிலும் ஸகலதிக்குகளிலும் பகவானுடைய குணங்களைக் கானஞ்செய்துவந்தார். ஒருக்கால் ஸத்யலோகம் சென்று, ப்ரஹ்மாவினுடைய ஸதஸில் கானஞ்செய்துகொண்டிருக்கும் ஹாஹா, ஹூஹூ என்ற கந்தர்வர்களுடன் பகவானுடைய குணங்களைப் பாட, ப்ரஹ்மதேவர் விசேஷமாயுபசரித்தார்.

பிறகு ஒருநாள், தும்புருவின் கிருஹத்திற்குச்செல்ல, அங்கிருந்த ஸ்வரகன்யைகள் இவரைத் திரும்பிப்பார்க்கக்கூடவில்லை. அதனால மிகவும் வெட்கமடைந்து, மறுபடியும் அநேகர்களிடம் கானவித்யாப்யாஸஞ்செய்தார்.

பிறகு பகவான் க்ருஷ்ணாவதாரஞ்செய்தபொழுது, அவரைக்கண்டு, ச்வேதத்வீபத்தில தனக்கு அனுக்ரஹித்த வார்த்தையை ஞாபகம்செய்ய, அவரும ஜாம்பவதியைப்பார்த்து, 'இந்த ரிஷிக்குக் கானசாஸ்த்ரத்தை நன்றாயுபதேசஞ்செய்' என்று கட்டளையிட்டார். அவளிடத்தில ஒருவர்ஷமும, ஸத்யபாமாவிடத்தில் ஒருவர்ஷமும், ருக்மிணியிடத்தில் இரண்டுவர்ஷங்களும் அப்யாஸஞ்செய்தும், ஸ்வரதேவதைகளின் அனுக்ரஹத்தையடையவில்லை. பிறகு, பகவான் அவருக்குத தானே கானவித்யையை உபதேசிக்க, ஸ்வரதேவதைகள அவரையடைந்தன; த்வேஷம் முதலிய துர்க்குணங்கள விலகிப பரமானந்தத்தையனுபவித்தார். தும்புருவை ஜயிக்கவேண்டுமென்ற எண்ணமும் அவரிடத்தில் அஸூயையும நசித்தன. அப்பொழுது பகவான், 'நீர் கானவித்யையைப் பூர்ணமாயறிந்தீர். ஆதியில் ப்ரார்த்தித்தபடி தும்புருவுடன் என்னுடைய ஸன்னிதியில கானஞ்செய்துகொண்டிரும்' என்று அனுக்ரஹித்தார்.—(அத்புதராமாயணம் 6, 7.)

வரி 7. எந்த விஷயத்தையும் :—" ரிக், யஜுஸ், ஸாமம், அதர்வணம் என்ற வேதங்கள், இதிஹாஸபுராணம், பித்ருகணங்கள், தேவகணங்கள், ப்ரஹ்மவித்யை, தேவவித்யை, பூதவித்யை, க்ஷத்ரவித்யை, நக்ஷத்ரவித்யை, ஸர்ப்பவித்யை முதலியவைகளை நான் அத்யயனஞ் செய்திருக்கிறேன்" என்று பூமாவித்யையைப்பற்றிச்சொல்லும் ப்ரகரணத்தில் நாரதரே தெரிவித்திருக்கிறார். "உத்தமகுலம், வித்யை, இந்த்ரியநிக்ரஹம் முதலிய உத்தமகுணங்கள் பொருந்தின புருஷனையே ஆசார்யனாக விரும்பவேண்டியதெ"ன்ற ஆபஸ்தம்பருடைய வாக்யப்ரகாரம் ஆசார்யலக்ஷணங்களும், ச்ரவணம், மனனம், நிதித்யாஸனம் என்ற ப்ரஹ்மஜ்ஞானலக்ஷணங்களும் பொருந்தியவரென்று தெரிகிறது.

இந்த ச்லோகத்தால், "கர்மத்தால் ஸம்பாதிக்கப்பட்ட லோகங்களைப் பரீக்ஷித்துப்பார்த்து ப்ராஹ்மணன் வெறுப்படையவேண்டியது. சாச்வதமான லோகங்களைக் கர்மானுஷ்டத்தால் அடையமுடியாது என்ற புத்தி பிறந்து, மோக்ஷஸாதனத்தையடையும்பொருட்டுக் கையில் ஸமித்தையெடுத்துக்கொண்டு, வேதார்த்தங்களையறிந்தவரும் ப்ரஹ்மநிஷ்டருமான குருவையேயடையவேண்டியது. அப்படித் தன்னிடம் வந்த மனஸடங்கிய சிஷ்யனுக்கு ஞானியான குருவானவர், நாசமில்லாததும் ஸத்யஸ்வரூபமுமான புருஷனை எதனால் அறிவாரோ, அந்த ப்ரமவித்யையை உண்மையாக உபதேசிப்பார்" என்று குருவையடையவேண்டிய க்ரமத்தை உபதேசிக்கும் முண்டகோபநிஷத் வாக்யத்தின் அர்த்தத்தில், சிஷ்யலக்ஷணம் 'தபஸ்வீ, வால்மீகி' என்ற பதங்களாலும், குருலக்ஷணம் 'ஸ்வாத்யாய நிரதம், வாக்விதாம்வரம, முனிபுங்கவம், நாரதம்' என்ற பதங்களாலும் காட்டப்பட்டிருக்கின்றன.

இந்த சலோகத்தில் 'ப்ரஹ்மம்' என்று அர்த்தமுள்ள 'தபஸ்' என்ற பதமானது முதலில் ப்ரயோகிக்கப்பட்டிருக்கிறபடியால், இது இஷ்டதேவதையின் நமஸ்காரமான மங்களசலோகம். .

இந்தச்லோகத்தில் 'நிரதம் தபஸ் ஸ்வாத்யாய' என்று அந்வயம் செய்தால, 'ஆனந்தஸ்வரூபமாயும் ஞானஸ்வரூபமாயுமிருக்கிற ப்ரஹ்மத்தை நன்றாய் த்யானம்செய்து' என்ற தேவதாநமஸ்காரமும, 'தபஸ்ஸு நிரதம் நாரதம் ஆத்யாய' என்று அந்வயம் செய்தால், 'வேதாத்யயனம் முதலியவைகளில் ஆசையுள்ள நாரதரை நமஸ்கரித்து' என்ற குருநமஸ்காரமும் சொல்லப்பட்டிருக்கிறதென்று சிலர் அபிப்ராயப்படுகிறார்கள்.

ராமாயணத்திலுள்ள 24,000 ச்லோகங்களும் காயத்ரீமந்த்ரத்தின் அக்ஷரங்களை அநுஸரித்தே செய்யப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு ஆயிரம்ச்லோகங்களுக்கும் காயத்ரீயின் அக்ஷரங்கள் முறையே முதலெழுத்துக்களாயமைக்கப்பட்டிருக்கின்றன. 'த' என்னும் அக்ஷரம், சொல்கிறவனுக்கும் சொல்லிற்கும் ஸௌக்யத்தையுண்டுபண்ணும்.—(ஸாஹித்யசூடாமணி.)

'த' என்னும் சப்தம் விக்னங்களை நாசஞ்செய்யும்; அதற்கு ஜலம் உத்பத்திஸ்தானம்; ப்ருஹஸ்பதி, தேவதை; ஆகையால் ஸுகத்தைக் கொடுக்கும். அக்ஷரங்களுடைய உத்பத்தி, கணக்கு, பூதம், பீஜம், தேவதை முதலியவைகளையறியாமல் ச்லோகங்களைச் செய்பவன், தாழைமரத்திலேறி முள்ளுகளால் பீடிக்கப்படும் குரங்கைப்போல் வருத்தமடைவான்.—(சமத்காரசந்த்ரிகா.)

மேற்சொன்னகாரணங்களாலேயே வால்மீகிமஹர்ஷி 'ப்ரஹ்மம்' என்ற அர்த்தமுள்ள அநேகம்பதங்களிருக்க, 'த' என்னும் அக்ஷரத்தை ஆதியாயுள்ள 'தபஸ்' என்ற சப்தத்தைக் கொண்டு இந்தக்காவ்யத்தை ஆரம்பித்தார். இது த்வனிப்ரதானமான க்ரந்தமாகையால், லோகத்திலுள்ள சிஷ்யர்கள் வால்மீகியைப்போலும், குருக்கள் நாரதரைப்போலும் இருக்கவேண்டுமென்று தாத்பர்யம்.—(கோ.)

வரி 9. இப்போழுது :—முன்காலங்களிலும், இதரலோகங்களிலும், மேற்சொல்லிய குணங்கள் பொருந்தின மஹாத்மாக்கள் இருந்ததாயும், இருப்பதாயும் ப்ரஸித்தமாதலால் குறிப்பிட்டுக்கேட்கப்பட்டது.—(கோ.)

**கல்யாண குணங்கள்** :—எல்லாவற்றையும் அறிவது; ஸகல சக்திகளையுமுடைத்தாயிருப்பது; ஸகலத்தையும் தனக்குள்ளடக்கிக்கொண்டிருப்பது (பலம்); ஸகலத்திற்கும ஈச்வரனாயிருப்பது (ஐச்வர்யம்); ப்ரபஞ்சத்திற்கு உபாதானகாரணமாயிருந்தும் விகாரமடையாமலிருப்பது (வீர்யம்); தேஜஸ், பொறுமை, கிருபை, வாத்ஸல்யம், சுத்தி, நேர்மை, அனுகூலமாயிருப்பது, பாபம், கிழத்தனம், மரணம், சோகம், பசி, தாகம் முதலியவைகளற்றிருப்பது; தன்னுடைய எண்ணங்களும் விருப்பங்களும் ஸத்யமாயிருப்பது முதலியவை.

வரி 10. **திவ்யாஸ்த்ரசஸ்த்ரம்** :—வா-ரா. I. 27, 28 பார்க்க.

"காருதிகம்: இதற்கு 'ப்ரஸ்வாபனம்' என்றும் பெயர். ரதங்களின்மேலும் யானைகளின்மேலுமிருந்து யுத்தஞ்செய்பவர்களை ப்ரக்ஞையற்றுக் கீழேவிழும்படி செய்யும். 'சுகம்:' இதற்கு

'மோஹனம்' என்றும் பெயர். இது குதிரைகளையும் யானைகளையும், பக்ஷிகளை வலையில் கட்டுவதுபோல் கட்டி நடக்கமுடியாமற் செய்யும். 'நாகம்:' இது சத்ருவைப் பைத்யம்பிடிக்கும்படி செய்யும். 'அக்ஷிஸந்தர்ஜனம்' என்ற மந்த்ரத்தை ஜபித்தவுடன் சத்ருக்கள் அவனைக்கண்டு நடுங்குவார்கள். 'ஸந்தானம்:' இது ஐந்த்ரம் முதலிய திவ்யாஸ்த்ரங்களுக்கும் பெயர். இது ஒரே ஆயுதமானாலும், ப்ரயோகிக்கப்பட்டவுடன் இதிலிருந்து கணக்கில்லாமல் ஆயுதங்கள் ஒன்றின்பின் ஒன்றாகப்புறப்பட்டுக்கொண்டேயிருக்கும். 'நர்த்தகம்:' இதற்குப் 'பைசாசம்' என்றும் பெயர். இது சத்ருவை ப்ரமைகொண்டு கூத்தாடச்செய்யும். 'கோரம்:' இதற்கு 'ராக்ஷஸம்' என்றும் பெயர். இது சத்ருக்களை ஓய்வில்லாமல நாசஞ்செய்துகொண்டேயிருக்கும். 'ஆஸ்யமோதகம:' இதற்கு 'யாம்யம' என்றும் பெயர். இதனாலடிபட்ட சத்ரு, பயங்கரமானமரணத்தைத் தானே தேடிக்கொள்வான்.

வரி 12. ஸ்மிருதிகள்:—ஸ்வாயம்புவமனுமுதலிய மஹாத்மாக்கள், வேதார்த்தங்களை மனஸால் ஸ்மரித்துச் சொன்னதாகையால், அவைகளுக்கு 'ஸ்மிருதி'களென்று பெயர். அவைகள் பதினெட்டு: மனு, விஷ்ணு, யமன், அங்கிரஸ், வஸிஷ்டர், தக்ஷர், ஸம்வர்த்தர், சாதாதபர், பராசரர், ஆபஸ்தம்பர், உசனஸ், காத்யாயனர், பிருஹஸ்பதி, கௌதமர், சங்கர், லிகிதர், ஹாரீதர், அத்ரி என்ற ரிஷிகள அவைகளுடைய கர்த்தாக்கள்.—(பவிஷ்ய புராணம். 1. 1.)

யாக்ஞவலகயஸ்மிருதியில் மேற்கண்ட பதினெட்டுப்பெயர்களையும், வ்யாஸரையும், யாக்ஞவல்க்யரையும் சேர்த்து ஸ்மிருதிகாத்தாக்கள் இருபதென்று சொல்லபபட்டிருக்கிறது:

ஸ்மிருதிரத்னத்தில, மேற்சொன்ன பதினெட்டுப்பெயர்களில, வஸிஷ்டர் காத்யாயனாகளை விலக்கி, யோகிச்வரரையும் ப்ரசேதஸையும் சேர்த்திருக்கிறது.

ஆங்கிரஸ்மிருதியில, 'ஜாபாலி, நாசிகேதர், ஸ்கந்தர், லோகாக்ஷி, காச்யபர், வ்யாஸர், ஸனத்குமாரர், ஸந்தனு, ஜனகர், வ்யாக்ரர், காத்யாயனர், ஜதுகர்ணி, கபிஞ்சலர், போதாயனர், காணாதர், விச்வாமித்ரர், பைடீனஸி, கோபிலர்' என்றவர்களை உபஸ்மிருதிகளுடைய கர்த்தாக்களாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

'இவைகளில் மனுஸ்மிருதி முக்யமானது. அதற்கு விரோதமான ஸ்மிருதிகள் ப்ரமாணமாகமாட்டாது.'—(யஜுர்வேதம், காண்டம் 2, ப்ரசனம் 2, அனுவாகம் 10: பார்ஹஸ்பத்யஸ்மிருதி.)

'வேதத்திற்கு விரோதமான எந்த ஸ்மிருதியும் ப்ரமாணமாக மாட்டாது.' ஜாபாலஸ்மிருதி, ஆபஸ்தம்பஸ்மிருதி, மீமாம்ஸாசாஸ்த்ரம், ஸ்காந்தபுராணம், ஸூதஸம்ஹிதை சிவமாஹாத்ம்யகண்டம், அத்யாயம் 1.

வரி 13. பிறர் செய்த.—எப்பொழுதாவது எந்தவிதமாயாவது பிறர் தனக்கு ஒரு அல்ப உபகாரம் செய்தாலும், அதைப் பெரிதாய் எண்ணிக்கொண்டு சந்தோஷிக்கிறார். பிறர் கணக்கில்லாமல் தனக்கு அபகாரங்கள் செய்திருந்தாலும், அவைகளை ஸ்மரிக்கிறதேயில்லை.—(வா-ரா. II. 2-11.)

வரி 15. ஆபத்காலத்திலும் :—மேலே வர்ணாச்ரமதர்மங்களைப் பார்க்க.

"ஸீதே! என்னுயிரையும், உன்னையும், லக்ஷ்மணனையும் விடுவேனேயல்லாது ப்ரதிக்ஞையைத்தவறமாட்டேன். அதிலும் ப்ராஹ்மணர்களிடம் செய்த ப்ரதிக்ஞையை ஒருபொழுதும் தவறமாட்டேன்.—(வா-ரா. III. 10. 19.)

வரி 18. சொல்லுகிறவர் :—'நான் இதுவரையில் பொய்சொன்னதுமில்லை, சொல்லப்போகிறதுமில்லை.'—(வா-ரா.)

வரி 19. ஜனங்களுக்குள் :— எல்லாப்ராணிகளிடத்திலும் ஹிதமானபுத்தியுடையவர்.

வரி 21. ஆத்மா :—ப்ரஹ்மம் ஸகல வஸ்துக்களுக்கும் ஆத்மா. ப்ரஹ்மத்தைத்தவிர காணப்படும் ஸகலவஸ்துக்களும் அநாத்மா. ப்ரஹ்மமே ஸத்யம், ஜகத் அஸத்யம் என்ற உண்மையையறிந்தவர். அல்லது அசைக்கமுடியாத தைரியத்தையுடையவர்.

வரி 24. அந்தக்கரணத்தை :—மனஸ், சித்தம், புத்தி, அஹங்காரம் என்ற நான்கும் பொதுவாய் அந்தக்கரணத்தின் விருத்திகள்; பல விஷயங்களில் பற்றும்பொழுது 'மனஸ்' என்றும், நடந்ததையும் நடக்கப்போவதையும் நினைக்கும்பொழுது 'சித்தம்' என்றும், நிச்சயத்தையடையும்பொழுது 'புத்தி' யென்றும், நான் என்ற எண்ணத்தையடையும்பொழுது 'அஹங்காரம்' என்றும் சொல்லப்படும்.

ஸங்கல்பவிகல்பம் (எண்ணமும் ஸந்தேஹமும்), நினைப்பு, நிச்சயம், அபிமானம் இவைகள் முறையே மனஸ், சித்தம், புத்தி, அஹங்காரம் என்ற அந்தக்கரணத்தின் தொழில்களே.—(சாரீரகோபநிஷத், பைங்களோபநிஷத் 2.)

வரி 25. கோபத்தை :—'சிக்ஷிக்கத்தகுந்தவர்களிடத்திலேயே கோபிக்கிறார்.'—(வா-ரா. II. 2. 45.)

'கடுமையான கோபத்தை வருவித்துக்கொண்டார்.'—(வா-ரா.)

வரி 26. சரீரகாந்தி :—'ரூபம், ஔதார்யம் முதலிய குணங்களால் புருஷர்களுடைய பார்வையையும், மனதையும் அபஹரிக்கிறவர்.'—(வா-ரா. II. 3-28.)

'வனத்தில் வஸிப்பவர்கள் ராமனுடைய ரூபத்தையும், காந்தியையும் கண்டு ஆச்சர்யப்பட்டார்கள்.'—(ஷை III.)

பக்கம் 3, வரி 4. கடுங்குகிறார்கள் : "தேவதைகள், அஸுரர்கள், அரசர்கள், வித்யாதரர்கள், கந்தர்வர்கள், உரகர்கள், ஸித்தர்கள், கின்னரர்கள், இந்த்ரர்கள், பக்ஷிகள் முதலிய ஸகல பூதங்களில் எங்கேயும் எந்தக்காலத்திலும் விஷ்ணுவிற்கு ஸமமான பராக்ரமமுள்ள ராமனையெதிர்த்து யுத்தஞ்செய்யக்கூடியவன் ஒருவருமில்லை. ஸ்வயம்புவாயும் நான்குமுகங்களுள்ளவனுயுமிருக்கிற ப்ரஹ்மாவும், த்ரிபுரர்களை ஸம்ஹரித்த மூன்றுநேத்ரங்களுள்ள ருத்ரனும், தேவர்களுக்கு நாயகனான மஹேந்த்ரனும், ராமன் கொல்லவேண்டுமென்று நினைத்த ஒருவனை ராமனுடன் யுத்தஞ்செய்து காப்பாற்றச் சக்தியற்றவர்கள்."—(ஷை V. 51. 40-46.)

"ஆயுதமெடுத்தவர்களுக்குள் ராமன் நானே."—(பகவத்கீதை X. 31.)

வரி 7. ஆவலுண்டாயிருக்கிறது :—என்னுடைய கேள்விகளுக்குத் திருப்தியான ஸமாதானம் சொல்லக்கூடிய குரு கிடைக்காமல் வருத்தப்பட்டுக்கொண்டிருந்த எனக்குத் தங்களைக்கண்டவுடன் இந்த விஷயத்தைத் தெரிந்துகொள்ளவேண்டுமென்று ஆவலுண்டாயிற்று.

வரி 8. தமக்கு :—ஆசார்யனுக்கு உபதேசிக்கும் திறமையிருக்கிறதாவென்று தெரிந்துகொண்டபிறகே சிஷ்யன் அவரையடையவேண்டியது என்ற ந்யாயப்படி, தான் கேட்ட விஷயத்தைத் தெரிந்துசொல்லும் சக்தி நாரதருக்குண்டென்று தெரிவிக்கிறார்.

வரி 11. கேட்டார் :—ஆக்ஷேபம். இப்படி வால்மீகி கேட்டது சரியல்ல.

1. 'ராமன், ஸீதை, லக்ஷ்மணன் இம்மூவர்களும் கைகூப்பிக்கொண்டு, வால்மீகியின் ஆச்ரமம் சென்று அவரை நமஸ்கரித்தார்கள்' என்றதாலும்,

2. 'மஹாராஜ! உம்முடைய ராஜ்யத்திலிருக்கும் விருக்ஷங்கள், புஷ்பங்கள், தளிர்கள், மொட்டுகள்கூட ராமனுக்கு நேர்ந்த கஷ்டத்தால் வாடியிருக்கின்றன' என்றதாலும்,

3. 'ராமன், ராமனென்று எங்கேயும் ஜனங்களுக்குள் அவருடைய சரித்ரமே வழங்கிவந்தது. ராமன் ராஜ்யபாலனம் செய்துகொண்டிருக்கையில் ஜகத்முழுவதும் ராமமயமாக விளங்கிற்று' என்றதாலும், ராமனுடைய ராஜ்யத்தின் நடுவில் வஸித்துக்கொண்டு, ராமனுடைய ஸகலவிருத்தாந்தத்தையுமறிந்திருக்கும் வால்மீகிமஹர்ஷி, லோகத்தில் எல்லா ஜனங்களுக்கும் தெரிந்த ராமசரித்ரத்தை அறியாமலிருக்க ந்யாயமில்லை. ஸத்யலோகத்திலிருந்துவந்த நாரதர் 'ராமனென்று ப்ரஸித்திபெற்ற' என்ற வார்த்தைகளை வால்மீகிக்குத்தெரியாததுபோல சொல்லவும் ந்யாயமில்லை.

**ஸமாதானம்**:—கையிலிருக்கும் நெல்லிக்கனியைப்போல் ராமசரித்ரத்தை நன்றாயறிந்த வால்மீகியினுடைய கேள்விக்கு 'அறிந்து சொல்லுகிறேன்' என்ற நாரதருடைய வார்த்தைகளுக்குத் தாத்பர்யமென்னவென்றால், 'வேதாந்த சாஸ்த்ரங்களில அனேக வித்யைகளைப்பற்றிச் சொல்லுமிடங்களில் அநேககுணங்களாயுடையதாக உபதேசிக்கப்படும் பரதத்வமானது, விஷ்ணுவா? அல்லது ருத்ரன் முதலியவர்களிலொருவரா?' என்று வால்மீகியின் கேள்வி. இதைத்தெரிந்துகொண்டே நாரதர், 'ராமனாக அவதரித்தவர் வேதாந்தங்களால் அறியவேண்டிய பரமபுருஷனான விஷ்ணுவே. ப்ரஹ்மா முதலியவர்கள் அவருடைய அதிகாரத்திற்குட்பட்டவர்கள். ஸத், ப்ரஹ்மா, ஆத்மா முதலிய சப்தங்கள் அவரையே சொல்லுகின்றன,' என்ற அபிப்ராயத்தைக்கொண்டு 'வேதாந்தசாஸ்த்ரங்களில் சொல்லப்பட்ட குணங்கள் ராமனிடத்தில் பொருந்தியிருக்கின்றன' வென்று பதில் சொன்னார்.

வரி 18. **தம்மால்**:—ஆக்ஷேபம். இந்த வாக்யங்களின் ப்ரயோஜனமென்ன?

**ஸமாதானம்**:—வால்மீகியினுடைய கேள்வியைத் தான் மனதில் வாங்கிக்கொண்டதைக்காட்டுகிறார்.

**குணங்கள்**:—வேதாந்தத்தினால் சொல்லப்பட்ட குணங்கள் விஷ்ணுவைத்தவிர மற்றவர்களிடத்தில் இருக்காது, அவர்களுக்குப் புருஷனென்றபெயரும் பொருந்தாது என்றதாலும், ப்ரஹ்மாவினுடைய உபதேசத்தாலும், விஷ்ணுவே பரதத்வமென்று சொல்லுகிறார்கள். 'எதிலிருந்து வாக்கும்மனஸும் எட்டாமல் திரும்பிவிடுகின்றனவோ அப்படிப்பட்ட ப்ரஹ்மத்தின் ஆனந்தத்தையறிகிறவன் யாதொன்றிடத்திலும் பயப்படான்' என்ற ச்ருதிவசனத்தால் ஆனந்தத்தைப்போல இதர ப்ரஹ்மகுணங்களும் அளவிடக்கூடாதவைகளென்று தெரிகின்றது.

**வரி 19. அரிதாகையால் :**—'ப்ரஹ்மாவுமல்ல, ருத்ரனுமல்ல' என்ற ச்ருதியால் பரமபுருஷனைத்தவிர மற்றவர்களிடத்தில் இவ்வளவு குணங்கள் பொருந்தியிராது. 'பரதைவம் இன்னதுதானென்று நிச்சயமாய்த் தெரிந்துகொள்ளவேண்டுமென்ற எண்ணத்துடன் நீ கேட்டதாக நான் அறிந்தேன்' என்று நாரதர் தெரிவிக்கிறார்.

**வரி 19. அப்படிப்பட்ட :**—'குணங்களிருப்பதாய் ஆரோபிக்கப்பட்ட' என்று சொல்லாமல, 'குணங்களுடன் கூடின' என்றதால், ப்ரஹ்மம் நிர்க்குணமென்ற பக்ஷமானது கண்டிக்கப்பட்டது.

**வரி 20. தெரிந்தெடுத்து :**—'எனது பிதாவான ப்ரஹ்மதேவரால் உபதேசிக்கப்பட்ட சதகோடிராமாயணத்திலிருந்து தெரிந்துசொல்லுகிறேன்.' இதனால் தன்னுடைய ஞானம் உபதேசக்ரமமாகக்கிடைத்ததென்று தெரிவிக்கிறார். அல்லது 'ராமனுடைய குணங்களை ஸ்மரிப்பதாலுண்டான ஆனந்தபரவசனாய எனக்கு ஒன்றுந்தோன்றவில்லை. கொஞ்சம ஸ்வாதீனப்படுத்திக்கொண்டு தெரிந்துசொல்லுகிறேன்' என்கிறார். இங்கே 'புருஷனை' என்றதால் கேள்வியின் முக்ய உத்தேசமான பரதத்வத்தை நிச்சயம செய்வதும், 'தெரிந்தெடுத்து' என்றதால் சருதிகளிலுள்ள புருஷ சப்தத்தின் நிஜதத்வமும் குறிப்பிடப்பட்டன.

**வரி 20. சொல்லத்தொடங்குகிறார் :**—'ஒரு வர்ஷம் குருசுச்ருஷை செய்யாதவனுக்கு ப்ரஹ்மவித்யையை உபதேசிக்கக்கூடாது' என்று விதித்திருந்தாலும, அது மூத்தகுமாரனைப்பற்றிச் சொன்னதல்ல. வால்மீகி பிருகுவின் புத்ரராவதால நாரதருக்கு ஸஹோதரபுத்ரன். ஆகையால் அவருக்குச சுச்ருஷையில்லாமலேயே பரதத்வத்தையுபதேசித்தார்.

**வரி 22. இக்ஷ்வாகு :**—(வா-ரா. I. 70 பார்க்க.)

**ஆக்ஷேபம் :**—லோகத்தில் அனேக ராஜவம்சங்களிருக்கப் பகவான் இக்ஷ்வாகுவம்சத்தில அவதரிக்கக் காரணமென்ன ?

**ஸமாதானம் :**—அவர் மஹாவிஷ்ணுவை வெகுகாலம் பக்தியுடன் ஆராதித்து அவருடைய கிருபையால் ரங்கநாதருடைய விக்ரஹத்தைப் பெற்றார். ஆகையால் அவருடைய வம்சத்தில் பகவானுக்கு விசேஷ அபிமானம்.

**ப்ரஸித்திபெற்ற :**—'சித்ரகூடத்தில் வஸிக்கும் உம்மாலும் ஸாதாரண ஜனங்களாலும் தாடகாவதம, விச்வாமித்ரயாகரக்ஷணம், அஹல்யாசாபமோசனம், பரமசிவனுடைய வில்லை முறித்தல, பரசுராமகர்வபங்கம், ஸாலவிருக்ஷங்களைத்துளைத்தது, வாலிவ

தம், ஸமுத்ரத்தில் அணைகட்டுதல், மூலபலஸைஸ்யத்தை நாசஞ்செய்தல் முதலிய அத்புதமான செயகைகளால் ஸ்ரீமந்நாராயணனென்று அறியப்பட்ட'

**பக்கம் 4. வரி 1. அந்தக்கரணத்தை**:—பகவானுடைய ரூபத்தைத் தெரிவிக்கிற குணங்கள் வர்ணிக்கப்படுகின்றன. "இவருடைய சரீரம் கிழத்தனத்தால குறைகிறதில்லை; பிறரால் நாசஞ்செய்யப்படுகிறதுமில்லை; பாபம், கிழத்தன்மை, மரணம், சோகம், பசி, தாஹம் என்ற தோஷங்களற்றவர்."—(ச்ருதி.)

வரி 2. **வீர்யமுள்ளவர்**:—நினைக்கமுடியாத அநேக விசித்ரமான சக்தியுள்ளவா. "இவருடைய சகதி, ஞானம், பலம் முதலிய குணங்கள் ஸ்வபாவமாயுள்ளவை, மேன்மையானவை, பலவகையானவை."—(ச்ருதி.)

**காந்தி**:—ஸ்வயமப்ரகாசர்: ஞானஸ்வரூபி.

வரி 3. **கலங்காத**:—"ப்ரஹ்மம் ஆனந்தஸ்வரூபம்" என்ற ச்ருதிப்படி ஒப்பில்லா ஆனந்தமுள்ளவர்.

வரி 4. **ஜயித்தவர்**:—எலலாலோகங்களையும் தன் வசத்தில் வைத்துககொண்டிருப்பவர். எலலாவற்றிற்கும் அதிபதி.

வரி 5. **புத்தியுள்ளவர்**:—ப்ரபஞ்சஸிருஷ்டிக்கு உபயோகமான பகவானுடைய குணங்கள் வர்ணிக்கப்படுகின்றன. "எவர் எல்லாவற்றையும் பொதுவாயும் விசேஷமாயும் அறிந்தவரோ."—(ச்ருதி.)

வரி 6. **நீதிகளை**:—"ப்ரஹ்மா முன்கல்பத்திலிருந்தபடி ப்ரபஞ்சத்தை ஸிருஷ்டித்தார்." "லோகங்கள் கெடாமலிருப்பதற்கு இவா ஆணையாயிருப்பவர்; எல்லாவற்றிற்கும் ஆதாரமாயிருப்பவர்."—(ச்ருதி.)

**காமந்தகி**:—ஆதியில்நீதிசாஸ்த்ரத்தை ப்ரஹ்மா லக்ஷம் அத்யாயங்களாகச்செய்தார். பிறகு சிவன் அவரிடத்திலிருந்து அதைப்பெற்றுக்கொண்டு பதினாயிரம் அத்யாயங்களடங்கிய வைசாலாக்ஷயம் என்ற க்ரந்தமாகச் செய்தார். அதை இந்த்ரன் பாஹுதண்டகம் என்று ஐயாயிரம் அத்யாயங்களாகச்சுருக்கினான். ப்ருஹஸ்பதி அதையே பார்ஹஸ்பத்யமென்று மூவாயிரமத்யாயங்களாகச்சுருக்கினார். அதையே சுக்ராசார்யர் ஆயிரமத்யாயங்களாகச் சுருக்கினார்.—(மஹாபாரதம் சாந்திபர்வம்-59: சுக்ரநீதி 1.)

ப்ரஹ்மாவினுடைய தண்டநீதி லக்ஷம் அத்யாயங்கள்; ருத்ரன், 50,000; ஸுப்ரஹ்மண்யர், 25,000; இந்த்ரன், 12,000, மநு, 6,000; ப்ருஹஸ்பதி, 3,000; சுக்ரன், 1,000; பாத்வாஜர்

700; கௌசிகர், 500; வேதவ்யாஸர், 300.—(நீதிப்ரகாசிகா 31.)

இந்தக்காலத்தில் வழங்கும் நீதிசாஸ்த்ரங்கள்: சுக்ரநீதிஸாரம், சாணக்யநீதி, காமந்தகீயநீதிஸாரம், (இவர் சாணக்யருடைய சிஷ்யர்) விதுரநீதி, மனுஸ்ம்ருதி, பஞ்சதந்த்ரம், ஹிதோபதேசம் முதலியவை.

வரி 7. பேசுந்திறமை:—"ப்ரபஞ்சஸ்ருஷ்டிக்குமுன் எவர் ப்ரஹ்மாவையுண்டுபண்ணுகிறாரோ, எவர் அவருக்கு வேதங்களைக்கற்பிக்கிறாரோ" என்ற ச்ருதிப்படி ஸகலவேதங்களையும் உலகத்தில் பரவச்செய்பவர்.

வரி 8. காந்தி:—அல்லது உபயவிபூதிக்கும் நாதன். "இந்த ஜகத் முழுவதையும் வ்யாபித்திருப்பவர்."—(ச்ருதி.)

வரி 9. சத்ருக்களை:—"இவர் பூதங்களுக்கு நாதன். அவைகளைக்காப்பாற்றுகிறவன்."—(ச்ருதி.)

சதைப்பற்றுள்ள:—"ஸூர்யமண்டலத்தின் நடுவில், மீசை, தாடி, தலைமயிர் முதலிய ஸகல அவயவங்களும் நகங்களின் நுனி வரையில் ஒரே தங்கவர்ணமாக எவர் காணப்படுகிறாரோ அவருடைய நேத்ரங்கள் ஸூர்யகிரணங்களால் அலங்கரிக்கப்பட்ட மலர்ந்த செந்தாமரைப்புஷ்பம்போலிருக்கின்றன. அவர் ஸகலபாபங்களினின்றும் விடுபட்டவர்" என்ற ச்ருதிப்படி பகவானுடைய திவ்யமங்களவிக்ரஹமானது பினவரும் பதங்களால் வர்ணிக்கப்படுகின்றது. இங்கே சொல்லப்பட்டிருக்கும் ராமனுடைய தேஹலக்ஷணங்களைப்பற்றி வா-ரா. V. 35 பார்க்க.

பக்கம் 5, வரி 4. தர்மத்தை:—ஆச்ரயித்தவர்களைக்காப்பாற்றுவதற்குபயோகமான குணங்கள் வர்ணிக்கப்படுகின்றன. "என்னைச்சரணமாக வந்து அடைந்தவனை நான் ஒருபொழுதும் கைவிடமாட்டேன். அவனிடத்தில் எவ்வளவு தோஷங்களிருந்தாலும், அவனைக்காப்பாற்றுவது ஸாதுக்களுக்கு இழிவாகாது. ஒரு தடவையாவது என்னைச் சரணமாகவந்து அடைந்து 'நான் உன்னை அண்டினவன், என்னைக்காப்பாற்றவேண்டும்,' என்று யாசிப்பவனை ஸகலபூதங்களினின்றும் பயமில்லாதவனாகச்செய்கிறேன். இதுதான் நான் அனுஷ்டிக்கும் வ்ரதம்."—(ஷை VI. 18—3, 33.)

வரி 4. ப்ரதிக்ஞையை:—வரி 15 கோட்டைப்பார்க்க.

வரி 7. கீர்த்தி:—"அவருடைய பெயரே விசேஷகீர்த்தி."—(ச்ருதி.)

ப்ரஹ்மக்ஞானம் :—" எவன் ஸகல விஷயங்களையும் பொது வாகவும் விசேஷமாகவும் அறிகிறானோ."—(ச்ருதி.)

"ப்ரஹ்மக்ஞானிகள் அடையும்படியாள எல்லாவற்றிற்கும் மேலான லோகங்களை என்னுடைய உத்தரவின்மேல் நீயடையக் கடவாய்" என்று ஜடாயுவை நோக்கிசசொன்னதற்கு இதேகாரணம். ப்ரஹ்மாவினுடைய உபதேசம் ப்ரஹ்மக்ஞானிக்கே கிடைக்கும். ப்ரஹ்மாவினால உபதேசிக்கப்படாமல் ஸர்வோத்தமமான லோகங்களையடையமுடியாது.—(திலகவ்யாக்யானம்.)

வரி 10. ஸ்வாதீனப்பட்டவர் :—தன்னை அண்டினவர்களுக்கு.

வரி 11. நிஜரூபத்தை :—அண்டினவர்களைக் காப்பாற்றவேண்டுமென்ற கவலையுள்ளவர்.

வரி 12. ப்ரஹ்மதேவருக்கு :—ஆக்ஷேபம். ராமன் ஸாக்ஷாத் பரப்ரஹ்மமென்பது வாஸ்தவமானால் அவருக்கு ஸாதாரண மனிதர்களைப்போல் சோகம், மோஹம் முதலிய குறைவுகள் ஏற்படலாமா?

ஸமாதானம் :—அவைகள் உபாதிஸம்பந்தத்தால் ஏற்பட்டவைகளேயொழிய வாஸ்தவமல்ல.

பரசுராமருக்குப் புண்யத்தால் கிடைக்கவேண்டிய லோகங்களைக்கெடுத்ததினாலும், ஜடாயுவுக்கு மோக்ஷத்தைக்கொடுத்ததினாலும், அயோத்யாநகரத்தில் வஸித்த ஜனங்களை அவர்களுடைய சரீரங்களுடன் ப்ரஹ்மலோகத்திற்கனுப்பினதினாலும் இது நன்றாய் விளங்குகிறது —(திலகவ்யாக்யானம்.)

வரி 13. ஐச்வர்யம் :—பகவானுடைய கிருபையையடைவதற்குப் புருஷகார (சிபாரிசு) மாயிருக்கிற மகாலக்ஷ்மியை விட்டுப்பிரியாதவர்.

வரி 15 அண்டினவர்களுக்கு :—"நான் ஸகலப்ராணிகளிடத்திலும் ஸமன். எனக்குச சத்ருவுமில்லை, மித்ரனுமில்லை" யென்று பகவத்கீதையில் பகவான் சொல்லியிருப்பதால், ஸகல லோகங்களுக்கும் பிதாவானவர்க்குச் சத்ருவென்பதே கிடையாது.—(திலகவ்யாக்யானம்.)

வரி 17. காப்பாற்றுகிறவர் :—அவதாரத்திற்கேற்ற குணங்கள் சொல்லப்படுகின்றன.

எல்லோரையும் :—லோகத்தில் சக்ரவர்த்திகள் விசேஷமாய்த் தங்களைச்சேர்ந்தவர்களையே காப்பாற்றுவதில் கவலையுள்ளவர்கள். இவரோ எல்லாப்ராணிகளையும் ரக்ஷிப்பவர்.

18. தர்மத்தை :—ஆனால் எல்லோரையும் ரக்ஷிக்கும்பக்ஷத்தில் கெட்டவனுக்கூட ஸுகத்தையனுபவிக்கும்படி செய்யவேண்டுமே? அப்படியல்ல. தர்மங்களைத் தான் நடத்திக்காட்டுவதாலும், பிறரைநடத்தும்படி செய்வதாலும், தவறினவர்களைத் தண்டிப்பதாலும், தர்மத்தை ரக்ஷிப்பவர்; அல்லது, சரணமடைந்தவர்களைகாப்பாற்றுவது என்ற தன்னுடைய விசேஷ தர்மத்தை.

22. பக்தர்களுக்கு :—லோகத்தில் சிலர் மற்றெல்லோரையும் காப்பாற்றுவார்கள்; பக்தர்களை மாத்ரம் உபத்ரவிப்பார்கள். ராமன் அப்படியல்ல. "நான் பக்தர்களுக்கு அடிமையாயிருப்பேன். ஸகல போகங்களிலும் அவர்களுக்குப்பாதிகொடுப்பேன், அவர்கள் சொல்லும் நிஷ்டூரவார்த்தைகளைப்பொறுப்பேன்" என்றபடி தன்னுடைய பக்தர்களைக்காப்பாற்றுகிறவர். அல்லது "ஸாதுக்களைக்காப்பாற்றுவதற்கும் துஷ்டர்களை நாசஞ்செய்வதற்கும் தர்மத்தை நிலைநிறுத்துவதற்கும் ஒவ்வொரு யுகத்திலும் உண்டாகிறேன்" என்ற பகவத்கீதாவசனத்தின் அர்த்தத்தை, ஸகல லோகங்களிலுள்ளவர்களின் இஷ்டங்களைப் பூர்த்திசெய்து (ஸாதுக்களைக் காப்பாற்றி), அனிஷ்டங்களை நிவர்த்திசெய்து (துஷ்டர்களை நாசஞ்செய்து), ஸாமான்யதர்மத்தையும் விசேஷதர்மத்தையும் நிலைநிறுத்தினவர். அல்லது, ஸீதையை விவாஹஞ்செய்து கிருஹஸ்தாச்ரமத்திற்குரிய தர்மங்களை அனுஷ்டித்துக்காட்டினவர். அல்லது, பரமசிவனுடைய வில்லை முறித்தல், பரசுராமனை ஜயித்தல் முதலியவைகளால் தன்னுடைய தர்மமான பரத்வத்தை (எல்லாவற்றிலும் மேலான தெய்வமென்பதை) ஸ்தாபித்தவர். "ஞானியானவன் என்னைத்தவிர வேறல்ல" என்ற கீதாவசனப்படி தன்னுடைய ஜனங்களான ஞானிகளுடைய யோகக்ஷேமங்களை வஹிப்பதனால் அவர்களைக்காப்பாற்றுகிறவர்.

24. வேதங்கள் :—18 வித்யாஸ்தானங்களிலும் பாண்டித்யமுண்டென்று காட்டப்படுகிறது.

26. தனுர்வேதத்தை :—ஆயுர்வேதம், தனுர்வேதம், காந்தர்வவேதம், அர்த்தவேதம் என்று உபவேதங்கள் நான்கு. வைதிககர்மங்களையனுஷ்டிப்பதற்குத் தடையான ரோகங்களை நிவர்த்திசெய்து தேஹ ஆரோக்யத்தை உண்டுபண்ணும் உபாயங்களைச் சொல்லும் வாஹடம், சரகம், ஸுச்ருதம் முதலிய க்ரந்தங்கள் ஆயுர்வேதமெனப்படும்.

ஆயுதங்களை உபயோகிப்பது, யுத்தஞ்செய்வது முதலியவிஷயங்களைப்பற்றிச்சொல்லும் சாஸ்த்ரம் தனுர்வேதமெனப்படும்.

இந்தவிஷயமாய் அக்னிபுராணத்தில் விரிவாய்ச்சொல்லப்பட்டிருக்கிறது.

வைதிகக்ரியைகளில் உபயோகப்படும் ஸாமவேதமந்த்ரங்களையும் பகவானுடைய குணங்களையும் கானம்செய்வதற்காகக் கானஞ்செய்யும் வழியைப்போதிக்கும் சாஸ்த்ரம், காந்தர்வவேதம் எனப்படும். இதற்கு ஸங்கீதசாஸ்த்ரமென்றும், பாதசாஸ்த்ரமென்றும் பெயர்.

வைதிககர்மங்களுக்கு வேண்டிய தனத்தை ந்யாயமாக ஸம்பாதிக்கும் வழியை உபதேசிக்கும சாஸ்த்ரம் அர்த்தவேதம். இதற்கு நீதிசாஸ்த்ரமென்று பெயர்.

ப. 6, வ. 11. நல்லவர்களால் :—“ ஞானத்தாலும் வயஸாலும் அநுஷ்டானத்தாலும் பெரியோர்களான ஸாதுக்களுடன் அஸ்த்ராப்யாசஞ்செய்யும் காலங்களுக்கிடையில் ராமன் பேசிக்கொண்டிருப்பார்.”—(வா-ரா. II.) பகவானுடைய ஸேவைக்குக் காலம், நியமம், கட்டுப்பாடு முதலியவைகளில்லை.—(திலகவ்யாக்யானம்.)

12. உதாஸீனன் :—விரோதியாயில்லாமலும் ஸ்நேஹிதனுயில்லாமலும் நடுநிலையாய் அலக்ஷ்யமாயிருப்பவன்.

17. ஸகல குணங்களும் :—“ வில்லாளியானவன் ப்ரயோகிப்பதற்குப் பாணங்களில்லாமையால் நிறுத்திவிடுகிறானேயொழிய ஆகாசத்தில் இடமில்லாமற்போகவில்லை. அதுபோல நமமுடைய சக்திக்குறைவால வர்ணிக்கமுடியாமல் ஓய்ந்துவிடவேண்டியதேயொழிய வர்ணிப்பதற்குப பகவானுக்குக்குணங்களில்லை எனபதால் அல்ல ” என்றபடி சுருக்கமாகச்சொல்லுகிறார்.

கௌஸல்யையின் “ ஸகல லோகங்களுக்கும் பதியாயிருக்கும் எந்தப்புத்ரனைக் கௌஸல்யைபெற்றாளோ ” என்றபடி புத்ரனாலுண்டாகும் ஸகல ஸௌக்யத்தையும் கௌஸல்யையேயடைந்தபடியால் தசரதருடைய புத்ரனென்று சொல்லப்படவில்லை.

20. அபிப்ராயம் :—உலகத்திலுள்ள ச்ரேஷ்டமான வஸ்துக்களின் முக்யமான குணங்கள் ராமனிடத்தில் பொருந்தியிருக்கின்றன என்று சொல்லி, அவர் ஒப்பற்றவர் என்பதை நிரூபிக்கிறார். “ என்னை மனுஷ்யனென்றே எண்ணுகிறேன் ” என்றபடி தான் பரமபுருஷனென்பதைக்காட்டிக்கொள்ளாதவர்.

22. தளராத :—துக்கப்படுவதற்குக் காரணங்களிருக்கும்பொழுதும் துக்கப்படாமலிருப்பதே தைர்யம். “ பகவானிடம மனதைச்செலுத்தின ஸாதுக்கள் அடிக்கடி துக்கங்களால் பீடிக்கப்

பட்டாலும் எப்படி வருத்தப்படமாட்டார்களோ அப்படி மலைகள் மழை தாரைகளால் அடிக்கப்பட்டும் யாதொரு கெடுதியையும் அடையவில்லை" பாகவதம்.

விஷ்ணுவின் : ராமன் விஷ்ணுவின் பாதி அம்சமானதையால் விஷ்ணுவிற்கு ஸமானமாகச் சொல்லலாம்.

ப. 7, வ. 1. சண்டையில் :—பிறர் தனக்குச்செய்யும் குற்றத்தைப்பொறுத்தாலும் தன்னையண்டினவர்களுக்குச்செய்த குற்றங்களைப்பொறுக்காதவரானதையால் ஸமுத்ரஜலத்தில் வடவாகனி உண்டாவதுபோல் அவருடைய குளிர்ந்த மனஸில் கோபாக்னி ஜ்வலிக்கும்.

2. பொறுமையில் :—தனக்குச்செய்யும் அபகாரத்தை அசேதனவஸ்துக்களைப்போல அறியாமலிருக்கிறவர்; "பிறர் தனக்குக் கணக்கில்லாத அபகாரங்களைச்செய்திருந்தாலும் அதை நினைக்கிறதேயில்லை."—(வா-ரா. II. 2.)

3. குபேரனுக்கு :—ஆக்ஷேபம் "கொடுப்பதில் காமதேனு, கல்பகவிருக்ஷம், சிந்தாமணி முதலிய வஸ்துக்களுக்கு ஸமமென்று சொல்லாமல், குபேரனுக்கு ஸமமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அவன் தனத்திற்கதிபதியேயொழிய விசேஷமாய்க்கொடுப்பவனென்று வர்ணிக்கப்படக்காணோம்."

ஸமாதானம் :—ஆனால் குபேரன் தனத்திற்கு அதிகாரதேவதையானதால் லோகத்திலுள்ள ஜனங்கள் அவனுடைய கிருபையாலேயே ஐச்வர்யத்தையடைகிறார்கள். ஆகையால் அவனுக்குக்கொடுக்கும் ஸ்வபாவம விசேஷமாயுண்டு. (கொடுக்கும் ஸ்வபாவம் இருப்பதுடன் குபேரனைப்போல ஐச்வர்யமுள்ளவர்) என்று சிலர் அர்த்தஞ்செய்வது பொருந்தாது. தனவானாயிருப்பது மாத்ரம் ஓர் குணமாகாது. மேலும், குபேரன விசேஷமாயகொடுக்குந்தன்மையில்லாதவனென்று ஓரிடத்திலும சொல்லப்படவில்லை.

5. இப்படிப்பட்ட :—இதுவரையில் வேதாந்தத்தில சொல்லப்பட்ட ஜகத்திற்குக்காரணமாயிருப்பது, எல்லாவற்றையும் அறிவது, ஸகல சக்திகளையும் உடைத்தாயிருப்பது, எல்லாவற்றிற்கும அந்தர்யாமியாயிருப்பது முதலிய குணங்கள பொருந்தின ப்ரஹ்மமே ராமனாக அவதாரம் செயததா? அல்லது ப்ரஹ்மா, ருத்ரன் முதலியவர்களில் ராமன் ஒருவனா? என்று வேதத்தின் தாத்பர்யத்தை விளக்குவதற்காக வால்மீகியால் கேட்கப்பட்ட நாரதர், மேற்சொன்ன குணங்கள் மற்றவர்களிடத்தில் இல்லாமையாலும்,

அவரிடத்திலேயேயிருப்பதாலும் ராமனே வேதாந்தத்தில் சொல்லப்பட்ட பரதத்வமென்று உபதேசித்தார்.

ஆக்ஷேபம் :—ப்ராஹ்மஸ்வரூபத்தைப்போல் பலஸ்வரூபமும் அதையடையவேண்டிய உபாயஸ்வரூபமும் வேதார்த்தமாகையால் உபதேசிக்கவேண்டியவைகளே அப்படியிருக்க வால்மீகி அவைகளைக் கேட்கவுமில்லை, நாரதர் உபதேசிக்கவுமில்லையே ?

ஸமாதானம் :—முதல் ச்லோகத்தில் 'பரிப்ரச்ச' என்ற வார்த்தையில் 'பரி' என்றதால் அவையிரண்டையும் கேட்டதாகவே தெரிகிறது. நாரதர் சொன்ன மறுமொழியில் 'ஜனங்களுக்கு அநுகூலத்தைச்செய்பவர்' என்றதால் உபாயமும், 'எப்பொழுதும் ஆச்சரியப்படக்கூடிய பரியமான பார்வையுள்ளவர்' என்றதால் பலஸ்வரூபமும் சொல்லப்பட்டது.

ஆ :—எப்பொழுதும் சுத்தமான அந்த வஸ்துவே உபாயமானால் எல்லோரும் முக்தியடையக்காணோமே ?

ஸ :—எவன் உபாயத்தையும் அதினாலடையப்படும் வஸ்துவையும் கைப்பற்ற யோக்யனோ அவனுக்கே பலம் சொல்லப்பட்டதேயொழிய, அதிகாரமில்லாதவனுக்குச் சொல்லப்படவில்லை. 'பலத்தையடையவேண்டுமென்கிற தீவரமான அபேக்ஷையும் இதர ஸாதனங்களை நாடாமலிருப்பதுமே அதிகாரம்' என்று மேலே சொல்லப்படும்.

ஆ :—இந்த ராமாயணம் வேதார்த்தத்தை விவரிக்கின்றதென்று சொல்லப்பட்டது. தர்மமும் வேதார்த்தமாகையால் அதை ஏன் சொல்லவில்லை ? மேலும், இதுவரையில் வேதாந்தார்த்தம் விவரிக்கப்பட்டது. இதற்குமேல் என்ன சொல்லப்படுகிறது ?

ஸ :—இதுவரையிலும் சொல்லப்பட்டதும் சொல்லப்படாததுமான ராமனுடைய கல்யாணகுணங்கள், அவருடைய திவ்ய சரித்ரங்களால் மேலே காட்டப்படுகின்றன. ராமாயணபுருஷர்களுடைய ஆசாரங்களால் ஸாமான்யதர்மமும் விசேஷதர்மமும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆ :—பாலகாண்டத்தின் கதையைத்தெரிவிக்கவில்லையே ?

ஸ :—அதில் தெரிவிக்கவேண்டிய குணவிசேஷங்கள் இல்லை, மேலும், முற்றிலும் தெரிவிக்கப்படாமலுமில்லை. 'இக்ஷ்வாகு வம்சத்தில் பிறந்தவர்' என்பதால் ராமனுடைய அவதாரமும்; 'மஹாவீர்யமுள்ளவர்' என்றதால் தாடகை ஸுபாஹு முதலியவர்

களைக்கொன்றதும்; 'தனுர்வேதத்தை நன்றாயறிந்தவர்' என்றதால் விச்வாமித்ரரிடத்திலிருந்து ஸகல அஸ்த்ரவித்யையை அடைந்ததும்; 'ஸ்ரீமான்' என்றதால் ஸீதையை விவாஹம் செய்துகொண்டதுமான பாலகாண்டத்தின்கதை காட்டப்பட்டிருக்கிறது.

இதற்குமேல் அயோத்யாகாண்டத்தின்கதை சொல்லப்படுகிறது.

10. விரும்பினார்:—கொடுக்கும் தசரதரோ, பத்துத் திக்குகளிலும் தடையில்லாமல் தனது ஆக்ஞையைச்செலுத்தப்பட்டவர்; ஒருவருக்குப்பயந்துகொடுக்கவுமில்லை, பிறருடைய பொருளைக்கொடுக்கவுமில்லை; ஆகையால், கொடுத்தவர்க்கு யாதொரு யோக்யதைக்குறைவுமில்லை; மேற்சொன்ன ஸகல உத்தம குணங்களால் எல்லோருக்கும் ராஜாவாகத்தகுந்தவர், எல்லோரையும் காப்பாற்றும் சக்தியுள்ளவர், பிறப்பாலேயே ராஜ்யத்தையடைய வேண்டியவர், நீதிசாஸ்த்ரங்களில் சொல்லப்பட்டிருக்கும் ராஜலக்ஷணங்கள் யாவும்பொருந்தியவர், எப்பொழுதும் ஜனங்களுடைய ப்ரீதிக்குப்பாத்ரமாயிருப்பவர், ப்ரஜைகளுக்கு அநுகூலத்தையேசெய்பவர், என்ற காரணங்களால் ராஜ்யத்தைப்பெற்றுக் கொள்கிறவருக்கும் யோக்யதை பூர்ணமாகயிருக்கிறது; தனது மந்த்ரிகள் முதலியவர்களுடன் ஆலோசித்தும் தான் ப்ரியப்பட்டும் செய்தகார்யம்; ஆகையால் திரும்பவும் ராஜ்யத்தை வாங்கினது உசிதமல்லவென்று காட்டப்படுகிறது.

(இந்த ஸர்க்கத்தில் 7 காண்டங்களின் கதையும் சுருக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இங்கே வ்யாக்யான கர்த்தாக்கள் வெகு அபூர்வமான விஷயங்களையெழுதியிருக்கிறார்கள். அவைகளைப் பின்வரும் காண்டங்களில் அந்தந்தவிடத்தில் காட்டியிருக்கிறேன்.)

ப. 8, வ. 19. சந்த்ரனை:—தக்ஷப்ரஜாபதி தனது இருபத்தேழு புத்ரிகளை ஸோமனுக்குப் பார்யைகளாகக்கொடுத்தார். அவன் ரோஹிணியிடத்தில் விசேஷப்ரேமை வைத்து, மற்றவர்களைக்கவனியாமல் அவளிடத்திலேயே காலங்கழித்து வந்தான். அப்பொழுது அந்தப்பெண்கள் அவனை எவ்வளவு ப்rார்த்தித்தும் ப்ரயோஜனமில்லாமல், தங்கள் பிதாவான தக்ஷரிடத்தில் போய் முறையிட்டுக்கொண்டார்கள். அவர் சந்த்ரனை வருவித்து எல்லாப் பார்யைகளிடத்திலும் ஸமமான ப்ரீதி வைக்கும்படி பலதடவை எச்சரித்தும், அவன் முன்போலவே நடந்துவந்தான். அப்பொழுது தக்ஷர் "நீ க்ஷயரோகத்தால் பிடிக்கப்படுவாய்" என்று சபித்தார். உடனே சந்த்ரன் நாளுக்குநாள் சக்திகுறைந்து க்ஷயமடையவாரம்பித்தான்.

அநேக யாகங்கள், யக்ஞங்கள், ப்ராயச்சித்தங்கள், ஜபங்கள் ஹோமங்கள் செய்தும் அந்த வ்யாதி தீரவில்லை. கொடிகள், செடிகள், விருக்ஷங்கள், ரஸங்கள், ஓஷதிகள் ஸாரமில்லாமல் நாளுக்குநாள் நசிக்கவாரம்பித்தன. சந்த்ரன் க்ஷயத்தையடைய ஸகல ப்ராணிகளுமிளைத்தன. அப்பொழுது தேவர்களெல்லாரும் சந்த்ரனிடத்தில் வந்து "உன்னுடைய ரூபமானது முன்போல் அவ்வளவு அழகாயும் ப்ரகாசமாயுமில்லை. இப்படிப்பட்ட கஷ்டம்வரக் காரணமென்ன?" என்று கேட்டார்கள். சந்த்ரன், தக்ஷப்ரஜாபதி தன்னைச்சபித்ததையும் அதற்குக்காரணத்தையும் தெரிவித்தான். தேவர்கள் தக்ஷரிடம் சென்று "ஸ்வாமி! சந்த்ரனிடத்தில் தயவு செய்யும்; நீர் கொடுத்த சாபத்தை மாற்றும். சந்த்ரன் மிகவும் க்ஷயத்தையடைந்திருக்கிறான். அவனுடைய ரூபத்தில ஸ்வல்பபாகந்தான் மிகுந்திருக்கிறது. அவன் இளைத்துப்போவதால் ஸகல ப்ராணிகளுமிளைக்கின்றன. ஸகல ஓஷதிகளும கொடிகளும செடிகளும உலர்ந்துபோகின்றன. அதனால் நாங்களுமிளைத்துப்போகிறோம. நாங்களில்லாமற்போனால் ப்ரபஞ்சம என்னாகியாகும்? இதெல்லாம் தெரிந்த தாங்கள் சந்த்ரனிடத்தில் தயவுசெய்யவேண்டும்" என்று ப்ரார்த்தித்தார்கள். அதற்குத்தக்ஷர் "என் வார்த்தை பொய்யாகாது. ஆனால் வேறு உபாயம செய்து சந்த்ரனுடைய கஷ்டத்தை நிவர்த்திசெய்கிறேன். இன்று முதல் அவன் தனது பார்யைகளிடத்தில் ஸமமாக நடந்துகொள்ளட்டும. ஸரஸ்வதிதீர்த்தத்தில் ஸ்நானம்செய்தால அவன் தனது பூர்வரூபத்தையடைவான். ஒரு மாஸத்தில முதல்பாதியில அவனுடைய ரூபம்வரவரக் குறைந்து பின்பாதியில ஒவ்வொருநாளும விருத்தியடையும்" என்றார்.

மேற்கு ஸமுத்ரக்கரையில் ப்ரபாஸமென்று ஒரு புண்யதீர்த்தமுண்டு. சந்த்ரன் அவ்விடத்திற்குச்சென்று அந்தத்தீர்த்தத்தில் ஸ்நாநம்செய்து பரமசிவனைப்பூஜித்தான். அமாவாஸ்யை முதல இவ்விதமனுஷ்டித்துவர, க்ரமக்ரமமாய் அவனுடைய கிரணங்களும தேஜஸும் அவனுக்குக்கிடைத்தன. அப்பொழுது ஸகலப்ராணிகளும் ப்ரபாஸதீர்த்தத்திலிருந்து சந்த்ரனுடன் தக்ஷரிடத்தில் வந்து அவரை நமஸ்கரித்தன. அவரும் திருப்தியடைந்து "சந்த்ர! ஸ்திரீகளை அலக்ஷ்யம் செய்யாதே. ப்ராஹ்மணர்களை அவமதிக்காதே. இனிமேலாவது ஜாக்ரதையாய் எனது கட்டளைகளை அனுஸரித்து நட" என்று எல்லோருக்கும உத்திரவுகொடுத்தார். அதுமுதல ஒவ்வொரு அமாவாஸ்யாதினத்திலும் சந்த்ரன் ப்ரபாஸதீர்த்தத்தில் ஸ்நாநஞ்செய்து தனது ரூப

த்தையும் அழகையும் மறுபடியுமடைகிறான்.—(பாரதம், சல்யபர்வம் 35; ஷெ சாந்திபர்வம் 343; பத்மபுராணம், ஸ்வர்க்ககண்டம் 2.)

ப. 11, வ. 3.—இதற்குமேல் ஆரண்யகாண்டக் கதை சொல்லப்படுகிறது.

12. இத்மவாஹர் :—இவருக்கும் அகஸ்த்யர் என்று சிலர் பெயரிடுகிறார்கள். "பிறகு அகஸ்த்யருடைய ஸஹோதரர் அகஸ்த்யரென்பவர் ஒரு ஸமயத்தில் காட்டில் காய்கிழங்குகளைத்தேடிக் கொண்டிருக்கும்போது தோழர்களால் கோபமூட்டப்பட்டு அவர்களைச்சபித்தார" என்று மார்க்கண்டேயபுராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.—(திலகவ்யாக்யானம்.)

ப. 14, வ. 13. இதற்குமேல் கிஷ்கிந்தாகாண்டக்கதை சொல்லப்படுகிறது.

ப. 17, வ. 8. இதற்குமேல் ஸுந்தரகாண்டக்கதை சொல்லப்படுகிறது.

ப. 18, வ. 9. இதற்குமேல் யுத்தகாண்டக்கதை சொல்லப்படுகிறது

ப. 20, வ. 9. இதற்குமேல் உத்தரகாண்டக்கதை சொல்லப்படுகிறது.

ப. 21, வ. 15. இந்த ராமசரித்ரம் :—ராமாயண பீடிகையில் 'ராமாயணத்தைப்படிப்பதால் உண்டாகும் பலம்' என்ற பாகத்தைப்பார்க்க.

ப. 22, வ. 6. ஸ்வர்க்கலோகத்தை :—ஸகல பாபங்களிலிருந்தும் விலகினவனுக்கு ஸ்வர்க்கமென்னும் அல்பபலம் கிடைக்குமென்று சொலவது கருத்தல்ல, பரமபதத்தை யடைகிறானென்பதே கருத்து. 'தமோமயமான ஆவரணமுள்ளதும ஜ்யோதிஸால் சூழப்பட்டதுமான ஸ்வர்க்கலோகம' என்ற சருதியால் இந்த அர்த்தமே வெளிப்படுகிறது.

7. அனுபவிப்பான் :—"அவனை 500 அப்ஸரஸ்த்ரீகள் மாலைகளுடனும் வாஸனைப்பொடிகளுடனும் எதிர்கொண்டழைக்கிறார்கள்."—(கௌஷீதகி உபநிஷத்.)

11. சூத்ரன் :—"இதிஹாஸ புராணங்களை ப்ராஹ்மணனை முன்னிட்டுக்கொண்டே நான்கு வர்ணத்தார்களையும் கேட்கச்செய்ய வேண்டியது" என்ற ஸ்ம்ருதிவாக்யப்படி சூத்ரனுக்கு இதிஹாஸபுராணங்களைக்கேட்க அதிகாரமேயொழிய படிக்க அதிகாரமில்லையென்று ஏற்படுகிறது. ஆனால் வால்மீகிமஹர்ஷி 'படித்தால்' என்னும் பதத்தை உபயோகித்திருப்பதால் இந்த ஸம்க்ஷேபராமாயணத்தைமாத்ரம் படிக்க அதிகாரமுண்டென்று ஏற்படுகிறது.

காயத்ரீமஹாமந்த்ரம் பரப்ரஹ்மஸ்வரூபத்தைத் தெரிவிப்பதால் அதை ஜபிக்கிறவனுக்கு ப்ரஹ்மலோகம் கிடைப்பதுபோல் காயத்ரியின் அர்த்தத்தை விவரிக்கிற ராமாயணத்தைப் படிப்பவனுக்கு அதே ப்ரயோஜனம் கிடைக்குமென்பதில் ஸந்தேஹமென்ன? முதல் மூன்று வர்ணத்தார்களுக்கும் காயத்ரீமந்த்ரத்தில் அதிகாரமிருப்பதுபோல் காயத்ரியின் அர்த்தத்தை விவரிக்கிற ராமாயணத்தைப் படிப்பதற்கும் அவர்களுக்கே அதிகாரமுண்டு. ஸ்த்ரீகளும் சூத்ரர்களும் ராமாயணத்தைப் பிறர் படிக்கக் கேட்கலாம்; தாங்கள் படிக்க அதிகாரமில்லை.—(திலகவ்யாக்யானம்.)

ராமாயணம் காயத்ரீமந்த்ரத்தின் ஸாரமாயிருக்கிறது, அதில் முதலாவது ஸர்க்கம் ராமாயணத்தின் ஸாரம்; ஆகையால் காயத்ரியின் முதல் அக்ஷரமாகிற ‘த’ என்ற அக்ஷரத்தில் ஆரம்பித்து, காயத்ரியின் கடைசி அக்ஷரமாகிய ‘த்’ என்றதால் முடிக்கப்பட்டிருக்கிறது.

இந்த ஸம்க்ஷேபராமாயணம் முதலான நான்கு ஸர்க்கங்களும் வால்மீகியின் சிஷ்யராலோ பிற்காலத்திலிருந்த மற்றவராலோ எழுதப்பட்டனவென்று சிலர் அபிப்ராயப்படுகிறார்கள். ஆனால் ஆனந்தராமாயணம் யாத்ராகாண்டம் 2-ல், “சதகோடி ராமாயணத்தை மஹாவிஷ்ணு பிரித்த காலத்தில் பாரதவர்ஷத்திற்குக் கிடைத்த பாகம் காலமஹிமையால் சிதைந்துபோகும் பிறகு ஸ்ரீ வேதவ்யாஸபகவான் அதில் மிகுந்த 24,000 ச்லோகங்களைக் காப்பாற்றிவைத்து, அதின் முன்னும்பின்னும் மங்களச்லோகம் முதலியவற்றைச் செய்துசேர்த்து ஏழுகாண்டங்களாய் வெளிப்படுத்துவார் என்று சொல்லப்பட்டிருப்பதால்” வால்மீகிராமாயணத்தில் 24,000 ச்லோகங்களுக்குமேலிருப்பதெல்லாம் வ்யாஸரால் செய்யப்பட்டிருக்கவேண்டும்.

## ஸர்க்கம் 2.

பரமகருணையுள்ள வால்மீகிமஹர்ஷி, “ஒரே விஷயத்தைச் சுருக்கமாயும் விஸ்தாரமாயும் வித்வான்கள் சொல்லவிரும்புகிறார்கள்” என்றபடி, தான் சுருக்கமாய்ச் சொன்ன ராமசரித்ரத்தை விஸ்தாரமாய்ச் சொல்லவேண்டுமென்ற எண்ணத்துடனும், வித்வான்கள் தான் செய்யும் க்ரந்தத்தில் விசேஷப்ரீதிவைக்கும்படிக்கும், க்ரந்தத்தைச் செய்தவரும், க்ரந்தமும், அதின் விஷயமும் இப்பற்றவைகளென்று 2, 3, 4 ஸர்க்கங்களில் முறையே காட்டுகிறார்.

க்ரந்தத்தைச்செய்தவர், விஷயங்களை நடந்தபடிபார்க்கவும் பார்த்தவைகளை உண்மையாக வர்ணிக்கவும் திறமையுடையவரா யிருக்கவேண்டும். மேற்சொன்ன உத்தமகுணங்களை வால்மீகி ப்ர ஹ்மதேவருடைய வரத்தால் பெற்றவராகையால் ஒப்பற்றவர்.

ப. 23, வ. 1. **தர்மசிந்தை** :—தனது குருவைப் பூஜிக்கவேண் டுமென்ற தர்மத்தையறிந்தவர்.

2. **பேசும்திறமை** :—ஸௌக்ஷ்ம்யம், ஸாங்க்யம், க்ரமம், நிர் ணயம், ப்ரயோஜனம் இவ்வைந்தும் வாக்யலக்ஷணங்கள். அது ஒன்பதுவிதமான சப்ததோஷங்களும், ஒன்பது விதமான புத்தி தோஷங்களுமில்லாமலும், உத்தேசித்த அர்த்தத்தைத் தெளி வாய்ச்சொல்வதாயுமிருக்கவேண்டும். அறியவேண்டிய வஸ்துக் கள் ஒன்றிற்கொன்று பேதமாயிருந்து, அவைகளுக்குள்ள தாரதம்யத்தைத்தெரிந்துகொள்வதால் அந்த விஷயத்தின் ஞானம் ஏற்படவேண்டியிருந்தால், புத்தியானது அந்த விஷயங்களில் ஒன்றின்பின் ஒன்றாய் காடுகின்றது. இப்படிப்பட்ட வார்த்தை கள் “ஸௌக்ஷ்ம்யம்” என்ற குணத்தையுடையவை. அதா வது, பராசரஸ்ம்ருதியில் விதவைகளின் புனர்விவாஹத்தைப்பற றிச் சொல்லியிருக்கும் ச்லோகத்தில், சிலவார்த்தைகள் அநேக அர்த்தங்களில் உபயோகப்படுகின்றன. அந்த வார்த்தைகளால் குறிக்கப்படும் வஸ்துக்களும் அநேகம். ஒவ்வொரு வார்த்தையின் குறிப்பான அர்த்தமானது அதற்குள்ள அநேக அர்த்தங்களை ஒன் றுக்கொன்று பகுத்தறிவதால் ஏற்படுகிறது. அப்பொழுது புத்தி யானது அநேக அர்த்தங்களை ஒன்றின்பின் ஒன்றாகப்பரீக்ஷித்து உசிதமில்லாதவைகளை நீக்கி உசிதமாயிருக்கும் ஒன்றைமாத்ரம் க்ரஹிக்கிறது. வாக்யத்தின் தாத்பர்யத்தை இவ்விதமாயறியவே ண்டியிருந்தால் அந்த வாக்யத்தில் “ஸௌக்ஷ்ம்யம்” என்ற லக்ஷ ணமேற்படுகிறது.

சில அர்த்தங்களைப் பரீக்ஷைக்காக ஒப்புக்கொண்டு பூர்வபக்ஷ ஸித்தாந்தங்களில் அவச்யமில்லாதவைகளை நீக்கி குணதோஷங் களை ஸ்தாபிக்கும்படியிருந்தால், “ஸாங்க்யம்” என்ற லக்ஷணம ஏற்படுகிறது. அதாவது, பராசரருடைய ச்லோகம் விதவைகளுக் குப் புனர்விவாஹத்தை விதிக்கிறது என்று ஒப்புக்கொள்வோம். ச்லோகத்தில் சில வார்த்தைகள் இதற்கு ஒத்தும் சிலவார்த்தை கள் ஒவ்வாமலுமிருக்கின்றன. அவைகளையெல்லாம சீர்தூக்கிப் பார்த்துப் பராசரர் விதவைகளுக்குப்புனர்விவாஹம் கூடுமென்று விதித்திருக்கிறார் என்பதைத் தத்காலம் ஒப்புக்கொள்வது “ஸாங் க்யம்.”

ஒரு வாக்யத்தில் உபயோகித்திருக்கும் வார்த்தைகள் முந்தியிருக்கவேண்டியதா? பிந்தியிருக்கவேண்டியதா? என்ற ந்யாயத்தை நிச்சயிப்பது "க்ரமம்" என்று பெயர்.

தர்மம், காமம், மோக்ஷம் இந்த விஷயங்களைப்பற்றிச் சொன்னவைகளை மேற்கண்ட விதமாய்ப்பரீக்ஷித்து வாக்யத்தில் எந்த விஷயத்தைப்பற்றிக் குறிப்பாகச்சொல்லப்பட்டிருக்கிறது என்று நிர்மாணஞ்செய்வது "நிர்ணயம்;" அதாவது, மேலே சொன்னபடி விதவைகளுக்குப் புனர்விவாஹம் உண்டென்று பராசரர் சொல்வதாக தத்காலம் ஒப்புக்கொண்டபிறகு, அந்த அர்த்தத்தை அங்கீகரிப்பதா? அல்லது தள்ளுவதாவென்று முடிவுசெய்வதுதான் நிர்ணயம். இதரக்ரந்தகர்த்தாக்களுடைய வாக்யங்களைப்பற்றி ஏற்பட்டிருக்கும் ஸித்தாந்தங்களுக்கு மேற்கண்ட அர்த்தம் ஒவ்வாமையால் அது விலக்கத்தக்கது. முடிவில், விதவைகளுக்கு நியோகவிதிப்படி இரண்டாவது பர்த்தா ஏற்படக்கூடுமே யொழிய விவாஹத்தால் ஏற்படாது என்பது 'நிர்ணயம்.'

ராகத்வேஷங்களால் உண்டாகும் துக்கம் அதிகரிக்குமபொழுது, அதைப்போக்குவதற்காக நாம் அனுஷ்டிக்கும் மார்க்கம் "ப்ரயோஜனம்" என்று சொல்லப்படும். தனக்கு வேண்டிய விஷயத்தையடைந்தாலும் வேண்டாத விஷயத்தை விலக்கினாலும் ஸந்தோஷமும, அப்படிச்செய்யாவிட்டால துக்கமுமுண்டாகிறது. அந்தத்துக்கத்தை நீக்குவதற்கு நாமனுஷ்டிக்குமுபாயம் 'ப்ரயோஜனம்' என்று பெயர்.

மேற்சொன்ன ஐந்து லக்ஷணங்களையும் நன்றாகக் கவனித்துப் பேசினால்மாத்ரம் வாக்யம் பூர்ணமாயும் தெளிவாயுமிருக்கும். இவைகளுக்குத் தர்க்கசாஸ்த்ரத்தில், "ப்ரதிஜ்ஞை, ஹேது, உதாஹரணம், உபநயம, நிகமனம்" என்றும்; மீமாம்ஸா சாஸ்த்ரத்தில "விஷயம், ஸம்சயம், பூர்வபக்ஷம், உத்தரம், நிர்ணயம்." என்றும் பெயர்கள்.

பேசும் வார்த்தைகள் அர்த்தத்தோடு கூடினவைகளாயும், அநேக அர்த்தங்களில்லாதவைகளாயும், ந்யாயத்திற்கு ஒத்தவைகளாயும், வேண்டியதைவிட அதிகமான அர்த்தங்களில்லாதவையாயும், மிருதுவாயும், ஸந்தேஹமில்லாதவைகளாயும், நீண்ட அக்ஷரங்கள் அதிகமாயில்லாமலும், மதுரமாயும், ஸத்யமாயும், தர்மார்த்தகாமங்களுக்கு விரோதமில்லாமலும், ப்ராக்ருத வார்த்தைகளின் கலப்பில்லாமலும், அக்ஷரக்குறைவில்லாமலும், செவிக்குக் கடுமையாயில்லாமலும், வரிசை தப்பியில்லாமலும், நூதனமான அன்

லயமில்லாமலும், காரணகார்யஸம்பந்தத்தோடு கூடினவைகளா யும், ஒவ்வொன்றிற்கும் குறிப்பிட்ட விஷயத்தையுள்ளவைகளா யுமிருக்கவேண்டியது; காமம, கோபம, பயம், பேராசை, தீன த்தன்மை, கபடம, வெட்கம், இரக்கம, கர்வம், இவைகளால் தூண்டப்பட்டுப் பேசக்கூடாது. பேசுகிறவன், கேட்கிறவன், பே சப்படும வார்த்தைகள, இம்மூன்றும் ஒத்திருந்தால் வாக்யக்கவி னாத்தம் தெளிவாய் வெளிப்படுகிறது. பேசும்பொழுது, பேசுகி றவன் கேட்கிறவனுடைய புத்தியை லக்ஷ்யம்செய்யாமல் தனக்கு மாத்ரம் தெரிந்திருக்கும அர்த்தங்களையுடைய வார்த்தைகளையுப யோகித்தால், அவைகள் எவ்வளவு ச்ரேஷ்டமாயிருந்தாலும் கேட் கிறவனுக்கு அர்த்தமாகாது. எவன் தான் உத்தேசித்த அர்த்தத் தைக் கவனிக்காமல் ச்ரேஷ்டமான அர்த்தத்தையும் சப்தத்தையு முடைய வார்த்தைகளை உபயோகிக்கிறானோ அவனுடைய வார்த் தையில் கேட்பவனுக்கு ஸந்தேஹமுண்டாகிறது. அவைகள் தோ ஷத்துடன் கூடினவைகள. எவன் தன்னுடைய அர்த்தத்தைத் தெளிவாய்த்தெரிவித்துக் கேட்பவனுக்கு ஸுலபமாய்த்தெரியும் வார்த்தைகளையுபயோகப்படுத்துகிறானோ அவனே பேசுந்திறமை யுள்ளவன்.—(பாரதம, சாந்திபர்வம் 320.)

மஹர்ஷி:—வேதாந்தங்களின் தத்வத்தை நிர்ணயமாகத்தெரிந் துகொண்டபடியால் ரிஷிகளுக்குள் ச்ரேஷ்டர்.

10. தேவலோகம்:—வால்மீகிக்கு ராமனிடத்திலிருக்கும் வி சேஷபக்தியை ப்ரஹ்மாவுக்குத்தெரிவிப்பதற்காக ப்ரஹ்மலோகத் திற்குச்சென்றார்.

14. தமஸா:—இந்த நதியானது தற்காலத்தில் "டான்ஸ்" என்ற பெயருடையது. அலஹாபாத் என்ற பட்டணத்திற்கு ஸமீபத்தில் கங்கையில் விழுகிறது.

ப. 25, வ. 11. கெட்ட எண்ணத்துடன்:—க்ரீடித்துக்கொண் டிருக்கும்பொழுது அதைக்கொன்றதால்.

26-11. சபித்தார்:—ப்ரஹ்மதேவருடைய அனுக்ரஹத்தால் வால்மீகிமஹர்ஷியுடைய வாக்கிலிருந்து வெளிப்பட்ட இந்த ச்லோகமானது கேவலம சாபமாயிருக்க ந்யாயமில்லை; பகவானு க்கு மங்களாசிர்வாதம செய்கிற ச்லோகமாயிருக்கவேண்டுமென் று நிச்சயித்துப பூர்வாசார்யர்கள் பின்வருமாறு அர்த்தஞ்செய்கி றார்கள். "மஹாலக்ஷ்மீக்கு வாஸஸ்தானமாயிருப்பவனே! நீ எப்பொழுதும் அளவற்ற மஹிமையோடு கூடியிரு. ஏனென்றால் ராவணன் மந்தோதரியென்ற இரண்டு ராக்ஷஸர்களில் காமபரவச

னாய் ஸீதையையபஹரித்த ராவணனைக்கொன்று மூன்றுலோகங்களையுங் காப்பாற்றினாயல்லவா.''

இந்தச்ச்லோகத்தால் தன்னுடைய இஷ்டதேவதையை ஸ்மரித்தல் என்ற மங்களமானது செய்யப்பட்டது. மேலும், ''சில வித்வான்கள் காவ்யத்தின் விஷயத்தை ஆதிமங்களச்லோகத்திலேயே தெரிவிக்கிறார்கள்'' என்றபடி, இந்த சலோகத்தில் ராமாயண கதையானது சுருக்கமாயடங்கியிருக்கிறது. எப்படியென்றால் :—''மஹாலக்ஷ்மீக்கு வாஸஸ்தானமாயிருப்பவனே'' என்றதால், ஸீதையின் விவாஹத்துடன முடிகிற பாலகாண்டக்கதையும; ''மஹிமையோடு கூடியிரு'' என்றதால், பிதிருவாக்யபரிபாலனத்தாலுண்டான மஹிமையைத்தெரிவிக்கிற அயோத்யாகாண்டக்கதையும்; ''எக்காலத்திலும்'' என்றதால், ரிஷிகளுக்குச்செய்த ப்ரதிக்ஞையை நிறைவேற்றினதால் ராமனுக்கு ஏற்பட்ட நித்யமான கீர்த்தியைத் தெரிவிக்கிற ஆரண்யகாண்டக்கதையும; வாலிதாரையென்ற இரண்டு வானரங்களில் (க்ரௌஞ்ச) ஸுக்ரீவனுடைய பார்யையான ருமையிடத்தில் ஆசைபபட்ட வாலியைக்கொன்றுரென்ற கிஷ்கிந்தாகாண்டக்கதையும; ஒருவரையொருவர் விட்டுப்பிரிந்ததினால் துக்கித்த (க்ரௌஞ்ச) ராமன ஸீதை இவர்களில் ஸீதையின் துக்கத்தை வர்ணிக்கிற ஸுந்தரகாண்டக்கதையும; கபடஸ்வபாவமுள்ள (க்ரௌஞ்ச) ராவணன மண்டோதரி இவர்களில் காமத்தால் புத்திகெட்ட ராவணனுடையவதத்தை வர்ணிக்கும் யுத்தகாண்டக்கதையும; தண்டகாரண்யத்தில் வஸிக்கும ரிஷிபத்னிகளைப்பார்க்கவேண்டுமென்ற ஆசையால் (காம) மதிமயங்கின ஸீதையைக் காட்டிற்கனுப்பி உபத்ரவத்ததை வர்ணிக்கும உத்தரகாண்டக்கதையும சுருக்கமாயச்சொல்லப்பட்டிருக்கின்றன.

ஆக்ஷேபம் :—பக்ஷிகளையும் மிருகங்களையும் கொல்வது வேடனுக்கு ஸ்வபாவமான தாமமாகையால் குற்றமில்லாதவனை வால்மீகி சபிக்கலாமா? ''மிருகங்கள ஜாக்ரதையாயிருக்கும்போதும், அஜாக்ரதையாயிருக்கும்போதும், மனிதர்களுடைய வரவைத்தெரிந்துகொள்ளாதிருக்கும்போதும், அவைகளின் மாம்ஸத்திற்காக ஆசைப்பட்டு மனிதர்கள் அவைகளைக்கொல்லுகிறார்கள். அதனால் தோஷமில்லை'' யென்று வாலியைக்கொன்ற ஸமயத்தில் ராமனே சொல்லியிருக்கிறாரல்லவா?

ஸமாதானம் :—ரதிகாலத்தில் தன்னை மறந்திருக்கும்பொழுது ப்ராணிகளைக்கொல்வது அதர்மமென்பது மஹர்ஷியின் அபிப்ராயம். இதே காரணத்திற்காகப் பாண்டுமஹாராஜனைக் கிந்தமனென்கிற மஹர்ஷி ''பாரதவம்சத்தில்பிறந்தவனே! கீர்த்தியையும் ஸ்வாக

கத்தையும்கெடுக்கும் கார்யத்தை ஏன் செய்தாய்? வனத்தில் ஸ்வேச்சையாய க்ரீடித்துக்கொண்டிருக்கும் மிருகங்களைத் தெரிந்தவன் கொல்லுவானே?" என்று சபித்தார்.

ஆ:—இதென்ன? மலயபர்வதத்திற்குப் போகவேண்டியவனுக்கு மந்தரபர்வதத்திற்குப்போகும் வழியை வர்ணிக்கிறதுபோலிருக்கிறது! க்ரந்தகர்த்தாவின் மஹிமையைவர்ணிக்க ஆரம்பித்து நடுவில் மஹான்களுடைய சரித்ரத்தை வர்ணிக்கிறார்! ப்ரஹ்மா அவ்விடத்திற்கு வந்து வரங்களையனுக்ரஹித்தார் என்ற கதையையல்லவோ சொல்லவேண்டும்?

ஸ:—"அர்த்தத்தினாலாவது சப்தத்தினாலாவது. காவ்யத்தின விஷயத்தைசசுருக்கமாகத்தெரிவிக்கவேண்டியது" என்ற ந்யாயப்படி இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. எப்படியென்றால்:- "சேறில்லாமல்" என்றதால், சேது என்ற புண்யஸ்தலமும்; "அந்தக்காட்டிற்கு ஸமீபத்தில்" என்றதால், ஸமுத்ரக்கரையில் லங்காநகரத்தில் ஸகலபோகங்களையனுபவித்துக்கொண்டு ப்ரஹ்மாவின்வரத்தால் தீர்க்காயுஸையடைந்து மந்தோதரியுடன் (விட்டுப்பிரியாமல்) ஸஞ்சரிக்கும ராவணனையும்; "அழகாய்ச சப்தித்துக்கொண்டு" என்றதால், வீணைமுதலிய வாத்யங்களால காலத்தை இன்பமாய்ப்போக்குகிற அந்தராக்ஷஸனையும்; "க்ரௌஞ்ச" என்றதால், ராவணன் மந்தோதரி என்ற இரண்டு ராக்ஷஸர்களையும்; "கண்டார்" என்றதால், ஞானதிருஷ்டியால் கண்டாரென்பதையும்; "கெட்ட எண்ணத்துடன்" என்றதால், ராவணனைக்கொல்லவேண்டுமென்ற ப்ரதிக்ஞை செய்தவரென்பதையும; "விரோதிக்கும் ஸ்வபாவமுள்ள" என்றதால், ஹிரண்யகசிபு, ராவணன், சிசுபாலன் என்ற மூன்று ஜன்மங்களிலும தொடர்ச்சியாய்ப் பகவான் அவர்களுக்கு ஸ்வபாவசத்ரு என்பதையும்; "நிஷாத" (வேடன்) என்றதால, ஸகலலோகங்களும எவரிடத்தில் நிலைபெற்றிருக்கின்றனவோ அந்த மஹாவிஷ்ணுவென்றும்; "ஆண் பக்ஷியை" யென்றதால், ராவணனையென்றும்; "பெண் பக்ஷி கதறிற்று" என்பதால், மந்தோதரியினுடைய ப்ரலாபமும்; "பக்ஷி" யென்றதால் (த்விஜ என்ற சப்தம பக்ஷிக்கும் ப்ராஹ்மணனுக்கும் பெயர்) புலஸ்த்யவம்சத்தில பிறந்ததனால் ப்ராஹ்மணனையும், "சிவப்பான கொண்டையுள்ள" என்றதால ரத்னக்ரீடம் தரித்தவனையும், "இறக்கையை விரித்துக்கொண்டிருக்கிற" என்றதால், புஷ்பகம்முதலான விமானங்களுள்ளவனையும; "தன்னை விட்டுப்பிரியாமல்" என்றதால், கும்பகர்ணன் இந்த்ரஜித் முதலானவர்களால் ஒத்தாசை செய்யப்பட்டவனையுமிருக்கும் ராவ

ணனையும்; "இரக்கம்" என்றதால் ராவணனிடத்திலுண்டா கும் வெறுப்பையும் (கருணையென்ற சப்தத்திற்கு இரக்கமென் றும் வெறுப்பென்றும் அர்த்தங்களுண்டு); "அதர்மம்" என்ற தால் ராவணனால் செய்யப்பட்டது அதர்மமென்றும்; இப்படி ராவ ணவதத்தை ப்ரதானமாயுடைய காவ்யத்தைப் "பௌலஸ்த்யவ தமெ" ன்று பெயரிட்டுச்செய்தார்.

அல்லது, "சேறில்லாமல்" என்ற பதங்களால் கோதாவரி நதி யின் தீர்த்தமும், அதன் கரையில் ராமன் ஸீதையோடு கூடியிருந் ததும், அவர்களில் ஸீதையைத் துஷ்டனாகிய ராவணன் ஹிம்ஸித் ததும் இவையெல்லாம் வால்மீகிக்கு ப்ரஹ்மாவினுடைய அனுக் ரஹத்தால் ப்ரத்யக்ஷமாகத்தெரிந்து, தான் செய்யும் காவ்யத்திற்கு "ஸீதாசரிதம்" என்று பெயரிட்டார். அந்தப்பக்ஷத்தில், "ஒரு க்ஷணங்கூட விட்டுப்பிரியாமல்" என்றதால் ஆத்யந்தமில்லாதவ ரென்றும்; "அழகாய்சசப்தித்துக்கொண்டு" என்றதால ஸகல வேதாந்தார்த்தத்தையுபதேசிக்கிறவரென்றும்; "க்ரௌஞ்சப க்ஷிகள்" என்றதால தபஸில் இளைத்துப்போயிருக்கும் ஸீதையை யும் ராமனையும்; "கெட்ட எண்ணத்துடன்" என்றதால மூன்று ஜன்மங்களிலும் ஸ்வபாவமாய் சத்ருத்வமுள்ளவும், "வேடன்" என்றதால் ஸகல லோகங்களையும ஹிம்ஸிக்கும ராவணனையும்; "அடித்தான" என்றதால் ஸீதையையபஹரித்து அதனால ராமனு க்குத் துக்கத்தையுண்டுபண்ணினனென்பதையும; "கதறுறு" என்றதால் ஸீதை ப்ரலாபித்ததையும்; "அந்தப்பக்ஷி" யென்ற தால் க்ஷத்ரியனாகிய ராமனையும் (த்விஜ என்ற சப்தத்திற்கு "இரண்டு ஜன்மங்களுள்ள" என்று அர்த்தமாகையால, பக்ஷி ப்ராஹ்மணன் க்ஷத்ரியன் வைச்யன் என்ற அர்த்தங்களுமுண்டு); "சிவப்பான தொண்டை" யென்றதால ரத்னக்ரீடத்தைத்தரிக் கத்தகுந்த என்றும்; "இறக்கையை" என்றதால் பாணத்தைக் கை யில் வைத்துக்கொண்டிருக்கும் என்றும் (பத்ரி என்ற சப்தத்தி ற்கு இறக்கையென்றும் பாணமென்றும் அர்த்தமுண்டு) அர்த்தம் செய்கிறார்கள்.—(கோ.)

ஆ:—ப்ரத்யக்ஷமாய்ப்பக்ஷியைக்கொன்ற வேடனைச்சபித்தா ரென்றதாத்பர்யமானது ஸ்பஷ்டமாயிருக்கிறது. ஆனாலும் "மூன் றுலோகங்களில வஸிக்கும் ஸகலப்ராணிகளையும் ஹிம்ஸிக்கும் ரா வணா! ராஜ்யத்தையிழந்து வனவாஸமுதலியவைகளால் மெலிந்து போயிருக்கும் ஸீதை ராமன் இவர்களுக்குள், ஸீதையை மரணத் தைக்காட்டிலும் அதிகமான துக்கத்திற்குட்படுத்தினையல்லவா? ஆகையால், நீ லங்காபுரத்தில் புத்ரன் பேரன் பரிவாரங்கள்

ஸைன்யங்களுடன், ப்ராஹ்மதேவரால் கொடுக்கப்பட்ட வரங்களை அனுபவித்துக்கொண்டிருந்த பாக்யத்தை இனிமேலடையமாட்டாய்'' என்று காவ்யத்தினுடைய தாத்பர்யத்தைக்குறிப்பிடுகிறதாயும், ஸகலலோகங்களுக்கும் மங்களாசீர்வாதமாயுமிருக்கும் இந்தச்லோகமானது ஸத்யரூபமான ஸரஸ்வதியால் வால்மீகியினுடைய வாக்கிலிருந்து முதலிலுண்டாயிற்று என்று கதகவ்யாக்யானக்காரர் அபிப்ராயப்படுகிறார்.

ஆனால், ராவணனை வதஞ்செய்து அயோத்யையில பட்டாபிஷேகமானபிறகு வால்மீகிமஹர்ஷி நாரதரைசந்தித்தாரென்று அவரே வ்யாக்யானஞ்செய்திருப்பதால், ராவணவதத்திற்குப்பிறகு சொன்ன இந்தச்லோகத்தில், நடந்தவிஷயத்தை இனிமேல் நடக்கட்டுமென்று ஆக்ஞாரூபமாகச சொலவது எப்படிப்பொருந்தும்? பூர்ணக்ஞானமுள்ள ஸரஸ்வதி, நடந்தவிஷயத்தை ஆசீர்வாதமாகச்சொல்வாளா? மேலும், தீர்த்தீயவ்யாக்யானத்தில் வால்மீகி இந்தச்லோகத்தில் தான்செய்யும்காவ்யத்தின விஷயத்தைக்குறிப்பிட்டிருக்கிறார் என்று சொல்லியிருக்கிறது. அப்படியிருந்தால, "இதென்ன ஆச்சர்யம்! நாம ஏன இவ்விதமசொன்னோம்'' என்று வால்மீகி தான் தெரியாமலேயே இந்தசலோகத்தை உசசரித்ததாகசசொல்ல ந்யாயமில்லை.

ஆ:—"என்னால் சொல்லப்பட்டது பத்யமா? அல்லது வசனமா?'' என்ற ஏன் ஸந்தேஹப்பட்டிருக்கக்கூடாது?

ஸ:—வேதங்களில் இந்தமாதிரியான ச்லோகங்கள அடிக்கடி காணப்படுவதால வால்மீகி அவைகளைத்தெரிந்துகொள்ளாமலிருக்க ந்யாயமில்லை. அப்பொழுது, தான் சொன்னது சலோகமா அலலவாவென்ற ஸந்தேஹமுமுண்டாகாது. அதற்கு முன்னால் நாரதருக்கும் வால்மீகிக்கும் நடந்த ஸம்வாதமானது ச்லோகரூபமாயிருக்கிறது. அப்பொழுதே வால்மீகி ஸந்தேஹப்பட்டிருக்க வேண்டும்.

ஆ:—ஸம்வாதம் நடந்தபோது ஸாதாரணவார்த்தைகளால் நடந்திருக்கலாம. "மாநிஷாத'' என்ற ச்லோகம் செய்தபிறகு அதை சலோகரூபமாய்ச்செய்திருக்கலாம்.

ஸ:—அப்படிச்சொலவதற்கு ஆதாரமென்ன? மேலும், வேறு விதமாகக்காணப்படுகிறது. வேடன் செய்தது அதர்மம் என்ற எண்ணத்தினால் சொல்லப்பட்ட வாக்யத்திற்கு இப்படி அர்த்தஞ் செய்வது உசிதமலல. ஆசீர்வாதஞ்செய்வதும் ந்யாயமல்ல. இந்த ச்லோகமுண்டான ஸமயத்தில் வால்மீகிக்கு ராமாயணமென்ற

காவ்யத்தைச்செய்வோமென்ற புத்தியுண்டாகவில்லை. ப்ரஹ்மாவினால் அனுக்ரஹிக்கப்பட்டபிறகே அந்தப்புத்தியுண்டாயிற்று. ஆகையால் எனக்குப் பின்வருமாறு தோன்றுகிறது.

நாரதர்முகமாய்த் தன்னுடைய கல்யாணகுணங்களைக்கேட்டு அவைகளை வர்ணிக்கவேண்டுமென்று வால்மீகிக்கு எண்ணமுண்டானதைத்தெரிந்து, தன்னுடைய சரித்ரத்தில் கருணாரஸம் ப்ரதானமாயிருப்பதால் அப்படிப்பட்ட காவ்யத்தைச்செய்வதற்கு அந்தரஸத்தைப்பூர்ணமாயனுபவித்தவனே தகுந்தவனாகையால், வால்மீகிக்குக்கருணையின் ஸ்வபாவத்தைத்தெரிவிப்பதற்காகவும்; முன்னே பிருகுமஹர்ஷியால் தனக்குக்கொடுக்கப்பட்ட சாபத்தையே மறுபடியும் வால்மீகியின்முகமாய்ச்சொல்லுவிப்பதால் அதையுறுதிப்படுத்துவதற்காகவும்; அதை வால்மீகி ப்ரத்யக்ஷமாய்ப் பார்க்கவேண்டுமென்பதற்காகவும், ராமமூர்த்தியே வேடனுடைய ரூபமாய், வால்மீகி பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே அவரை லக்ஷ்யம்செய்யாமல், அவருக்கெதிரே ராக்ஷஸரூபியான க்ரௌஞ்சபக்ஷியையடித்தார். பிறகு வால்மீகியினுடைய மனஸில் அந்தர்யாமியாயிருந்து அவரை ஏவி, "இந்த வேடனால் மஹா அதர்மமானகார்யம் செய்யப்பட்டது" என்ற கோபத்தால், "வேடா, பாபபுத்தியுள்ளவனே! காமத்தால்மோஹித்த இரண்டு க்ரௌஞ்சபக்ஷிகளில் ஒன்றைக்கொன்றாயல்லவா? நீ இந்த லோகத்தில் ஜீவித்திருக்கும்வரையில் உனது பெண்டுபிள்ளைகளுடன் சேர்ந்திருக்கமாட்டாய்" என்று சபிக்கும்படிசெய்தார். மானிஷாத என்ற ச்லோகத்தை உச்சரித்தபிறகு ப்ரஹ்மாவினுடைய அனுக்ரஹத்தால் ராமமூர்த்தியின் ஸர்வவ்ருத்தாந்தத்தையுமறியும் ஞானத்தையடைந்து செய்த ச்லோகத்தில் "விரோதஸ்வபாவமுள்ள" என்ற பதத்தால் அந்தப்பக்ஷி ராக்ஷஸரூபமாயிருந்ததென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. பகவானுக்கு லோகரீத்யாய் ராக்ஷஸர்களிடத்திலே விரோதமென்பது ப்ரஸித்தம். வேடனுக்கு ப்ராணிகளிடத்தில் விரோதபுத்தியில்லை, ஆஹாரத்திற்காகவே அவைகளைக்கொல்லுகிறான் என்பது ப்ரஸித்தம்

இப்படிச் சொல்வதற்கு என்ன ஆதாரமென்றால், வால்மீகியினுடைய ச்லோகங்களில் அடங்கியிருக்கும் அர்த்தமே. அது மேலே ஸ்பஷ்டமாகத்தெரியும். அதில் ஸந்தேஹமுண்டானால், ஒவ்வொருவரும் தனக்குள் அந்தர்யாமியாயிருக்கிறவரைக்கேட்கட்டும். மேலும், பாத்மபுராணத்தில பார்வதிக்கும பரமேச்வரனுக்கும் நடந்த ஸம்வாதத்தில ராமனுடைய மஹிமையை வர்ணிக்குமிடத்தில் 24-வது அத்யாயத்தில், "பிறகு அந்தத்தேசத்தில்

வஸிக்கும் கெட்ட நடத்தையுள்ளவனும், லோகத்தார்களைத் தூஷிக்கிறவனுமான ஓர் வண்ணான் தப்பிழைப்பவன், தன்னுடைய பெண்சாதியைத் திட்டும் ஸமயத்தில் ராவணனுடைய க்ருஹத்தில் வஸித்த ஸீதையைத் தூஷித்தான். ராமன் அதைத் தூதர்கள் முகமாய்க் கேட்டு, லோகாபவாதத்திற்குப் பயந்து, லக்ஷ்மணனையழைத்து, "நான் ஸீதையைக் காட்டிற்கனுப்பப்போகிறேன். அதற்கு லோகாபவாதம் வெளிப்படையான காரணம். ப்ருகுமஹர்ஷியாலும் வால்மீகியாலும் கொடுக்கப்பட்ட சாபமே வாஸ்தவகாரணம்" என்று ராமன் சொன்னதும்; ஸ்காந்தபுராணம் பாதாளகண்டம் அயோத்யாமஹாத்ம்யம் புண்யதீர்த்தங்களுடைய வர்ணனையில் "சபித்ததனால் மிகவும் தபித்துக்கொண்டிருக்கும் புண்யாத்மாவான வால்மீகியினிடத்திற்கு ப்ரஹ்மதேவர் வந்து, வால்மீகியால் பூஜிக்கப்பட்டுக் "குழந்தாய்! இங்கே வேடனாய் வந்தவர் ராமமூர்த்தியே தவிர வேறல்ல. அவருடைய கல்யாணகுணங்களை வர்ணிப்பதினாலேயே நீ லோகத்தில விசேஷகீர்த்தியடைவாய்" என்றதும்; யோகவாஸிஷ்டத்தில் ராமனுடைய அவதாரத்திற்குக் காரணங்களைச் சொல்லும்போது, "தமஸாநதிக்கரையில் வேடனுடைய வேஷந்தரித்த ராமமூர்த்தியானவர், தன்னுடைய சரித்ரத்தை லோகத்திலுள்ள ஜனங்களுக்குத் தெரியப்படுத்தவேண்டுமென்ற எண்ணத்துடன் ராவணனை க்ரௌஞ்சபக்ஷியின் ரூபமாகக் கொன்றார். அதைப்பார்த்துக்கொண்டிருந்த வால்மீகி, அவனைச் சபித்தார். அதைக்கேட்டுப் பகவான் அந்த இடத்திலேயே மறைந்துவிட்டார். பிறகு சபித்துவிட்டோமே என்று வருந்தப்பட்டுக் கொண்டிருந்த வால்மீகியானவர், ப்ரஹ்மதேவரால் தனது ஸந்தேஹத்தைத்தீர்த்து ஆறுதலையடைந்தார்" என்றதும் ப்ரமாணங்கள்.

இத்தப்பூமியைக் கிழிந்தவஸ்த்ரத்தைப்போல் அலக்ஷ்யமாய்த்தள்ளிவிட்டார்; மஹாஸமுத்ரத்தை ஒருதுளி நீரைப்போல் கட்டிவிட்டார்; வயல்சென்ற பக்ஷியைப்போல் ராவணனை ஒரு பாணத்தால் வதஞ்செய்தார்; லங்காராஜ்யத்தைத் தனது முத்ரை மோதிரத்தைக்கொடுப்பதுபோல் விபீஷணனுக்கு அலக்ஷ்யமாகக் கொடுத்தார். இவ்விதமான மஹிமையுள்ள ரகுநாதனுடைய சரித்ரத்தைக்கேட்டு எவன்தான் ஆச்சர்யப்படமாட்டான்?—(திலகவ்யாக்யானம்.

"உலகத்திற்குத் தகப்பன் தாய்களைவிட மேலானவர்களும், சோகரூபமான முப்பத்திரண்டு அக்ஷரங்களுள்ள ச்லோகத்தால் வேடனைச்சபித்தவர்களுமான வால்மீகிமஹர்ஷி முதலிய பெரி

யோர்கள் லோகஹிதத்தின்பொருட்டு ராமாயணத்தைச்செய்தார்கள். ஆத்மாவிற்குத் (பலவகையான பிறப்பைக்கொடுப்பதினால்) துக்கத்தைக்கொடுக்கும் தமோமயமாயும், பூலோகம், ஸ்வர்க்க லோகம் இவைகளிலிருந்து விடுபட்டதுமான சரீரத்தைத்தான் செய்த ராமாயணத்தைக்கேட்டதால் போக்கடிக்கிறார்கள்.''—(ரிக்வேதஸம்ஹிதை, 7-2-29.)

ஸ்ரீவால்மீகிமஹர்ஷி ஜனங்களிடத்தில் அவரவர்களுடைய தாய்தகப்பன்களைவிட விசேஷப்ரேமையுடன் ஸ்ரீமத்ராமாயணமென்னும் மஹாகாவ்யத்தைச்செய்து அதைக்கேட்பதினாலும் படிப்பதினாலும், அசரீரலக்ஷணமான முக்தியையடைய அதை ஸாதனமாகக்கொடுத்தார். ''சரீரமில்லாமலேயேயிருப்பவனை ப்ரியம், அப்ரியம் தொடுகிறதில்லை.''—(ச்ருதி.) சோழிமையைத்தேடினவனுக்கு ரத்னமகப்பட்டதுபோல், ராமகதையைத்தேடிய ஸ்ரீவால்மீகிமஹர்ஷியால் பரதத்வமடையப்பட்டது. இது ஸ்ரீராமாயணத்தில் முதல்மூன்று அத்யாயங்களால் காட்டப்பட்டிருக்கிறது.

''இது கார்யம், இது அகார்யம் என்ற பகுத்தறிவில்லாத ஸத்யமார்க்கத்தைவிட்டபாபிகளுக்கு நரகத்திலிருந்து கரையேற்றம் எப்படி ஏற்படாதோ, அப்படி அகார்யஞ்செய்த பாபியான நீ நல்ல கதியடையமாட்டாய்'' என்று சபித்தபடியால் கோபத்திற்கு இடங்கொடுத்தவர்கள். (ஷை 7-2-29.)

''வேதமாகிற புராதனப்ரமாணத்தைக்கொண்டும், ஞானக்கண்ணாலும், சோகரூபமான சலோகத்தையடைந்தபடியினாலும், இதே மாதிரியான ச்லோகங்களால் நாரதரால் உபதேசிக்கப்பட்ட புருஷனை வர்ணிப்போமென்று நிச்சயித்துக் காலஞ்செய்தார்கள். வால்மீகி முதலிய மஹர்ஷிகள், உலகமெங்கும் வ்யாபித்தும் எல்லாரிடத்திலும் அந்தர்யாமியாயுமிருக்கும் ஸ்ரீமஹாவிஷ்ணுவினுடைய பரிசுத்திக்குக் காரணமாகிய குணங்களைச்சொல்லித் தன்னுடைய வார்த்தைகளைப் பரிசுத்தப்படுத்திக்கொண்டார்கள். ஆச்சர்யகரமான நடையுள்ளவனும், யஜமானத்ரோஹமில்லாதவனும், தூதனுமான ஹநுமான் ஸீதையைக்கண்டார். வால்மீகி ஹநுமார் இவ்விருவரும் ராமகதையைப் பரவச்செய்தவர்களானாலும் ஹநுமார் ராமனுக்கு மிகவும் ப்ரியமான ஸேவகன்.''—(ஷை 7-2-29.)

இப்படி மற்றவர்களும் ராமகதையால் வாக்கையும், ராமனுக்குப் பணிவிடைசெய்வதால் தேஹத்தையும் பரிசுத்தப்படுத்திக் கொள்ளவேண்டுமென்பது தாத்பர்யம்.

இம்மாதிரி பரமாத்மாவிஷயமாய் வர்க்கைப் பரிசுத்திசெய்துகொள்ளுகிறவனுக்குக் கிடைக்கும் பலம் பின்வரும் மந்த்ரத்தால் தெரிவிக்கப்படுகிறது.

"இப்படிப் பரமாத்மாவின் குணத்தை வர்ணித்துச் சுத்தனாயிருப்பவன், ஆத்மதத்வத்தைக்காப்பாற்றுகிறான்; தன்னுடைய வித்யையின் மஹாத்ம்யத்தால் பிறரால் அவமதிக்கப்படாதவனாகிறான். ஆகையால் அவனுக்கு ஓரிடத்திலும் பயமேநேரிடாது. திவ்யமங்களஸ்வரூபத்யானமுள்ளவனாகையால் எல்லா லோகங்களையும் அறிவதாகிற ஞானம், தீனர்களைக்காப்பாற்றுதற்குக்காரணமான அளவற்ற தயை, ஞானமார்க்கம் கர்மமார்க்கம் இவ்விரண்டையும அடையாமலிருப்பவர்களைச் சண்டையில் கொல்வதினால் அனுக்ரஹிப்பது ஆகிய மூன்று பரிசுத்தமான கார்யங்களையும் பெறுகிறான்."—(ஷை 7-2-29.)

அவனுடைய ஞானம், தயை, சௌர்யம் லோகோபகாரத்தின்பொருட்டே என்பது தாத்பர்யம். "ஞானத்திற்கு ஸமமான பரிசுத்தமான வஸ்து இல்லை; தயைக்கு ஸமமான தாமமில்லை; ஆயுதத்தினால் பரிசுத்தர்களாய்ச் சத்ருக்கள் நல்ல லோகத்தை யடையட்டும் என்ற எண்ணமே மேலான தர்மம்."—(அபியுக்தர்கள்.)

"ராமகதையால் காலங்கழிப்பவனே மேலானவன்; அதில்லாதவன் மிகவும் அதமன். வருணனுடைய பிள்ளையான ஸ்ரீவால்மீகி மஹர்ஷியின் நாக்கு நுனியில் ஸ்ரீமஹாவிஷ்ணுவின் இச்சையால் விஸ்தரிக்கப்பட்ட ராமகதை விளங்குகிறது. ராமத்யானமுள்ள வித்வான்களோ அது முழுவதையும் அடைவார்கள். இப்படி எல்லோருக்கும் எளிதில் கிடைக்கக்கூடிய ராமகதையை எவன் கேட்காமலும படிக்காமலும் அலக்ஷ்யம் செய்கிறானோ அவன் அஸிபத்ரவனமென்ற மிகவும் கடுமையான நரகத்தையடைகிறான்."—(ஷை 7-2-29. மந்த்ரராமாயணம்.)

14. **யோசித்தார்**:—தனக்குள் அந்தர்யாமியாயிருக்கும் பகவானுடைய ஏவுதலால வேடனிடத்தில் லோகத்திலுள்ள மற்றவர்களைக்காட்டிலும் அதிகமான மஹிமையையும், எதிரே கிடக்கும க்ரௌஞ்ச பக்ஷியினிடத்தில் குறைவான புத்தியையும் உணர்ந்து, லோகத்தில் நிந்திக்கக்கூடியதாயும், அபகீர்த்தியை உண்டுபண்ணக்கூடியதாயும், மஹாபாதகங்களைக்காட்டிலும் அதிக பாபமாயுமுள்ள கார்யத்தைச்செய்தோமென்று கவலையடைந்தார்.

இவையெல்லாம் வால்மீகியால் செய்யப்பட்ட ச்லோகங்களாயிருந்தாலும், ராமாயணகாவ்யத்தைக் குசலவர்கள் பாடும்

படியாகச் செய்தபடியால், இந்த வாக்யங்கள் அவர்கள் சொன்னதாகவேயிருக்கவேண்டும். அப்படியில்லாவிட்டால் தனக்குண்டான கவலையானது தனக்குத்தெரியுமாதலால் உண்டாயிற்று என்று சொல்ல ந்யாயமில்லை.—(திலகம்.)

27-4 ச்லோகமேயல்லது :—ச்லோகத்தினுடைய லக்ஷணங்கள் பொருந்தியிருப்பதால் சலோகமென்ற பெயரை உடைததாயிருக்கட்டும்—(கோவிந்தராஜீயம்.) எனக்குக் கீர்த்தியைகொடுக்கிறதாயிருக்கட்டும் ; வேறுவிதமாயிருக்கவேண்டாம்.—(திலகம்.)

6. உத்தமமான :—ராமாயணத்தினுடைய ஸகல அர்த்தத்தையும் சுருக்கமாய்த்தெரிவிப்பதால் மிகவும் உத்தமமானது.—(கோ.) எனக்குக் கீர்த்தியுண்டாக்கட்டும் என்ற வால்மீகியின் வார்த்தையை அங்கீகரித்தார். அபகீர்த்தியை உண்டாக்கக்கூடியதாயிருந்தாலும் கீர்த்தியை உண்டாக்கட்டுமென்று பரத்வாஜர் சொன்னதால் வால்மீகி ஸந்தோஷித்தார்.—(தில.)

10. விதிப்படி :—வ்யாஸஸ்ம்ருதியில் மாத்யான்ஹிகஸ்நாந விதி பூர்ணமாகச்சொல்லப்பட்டிருக்கிறது. புண்யவிருக்ஷங்களான அரசு வில்வம் இவைகளின்கீழிருக்கும் மண், கோமயம், புஷ்பம், அக்ஷதை, தர்ப்பம், எள்ளு, சந்தனம் இவைகளையெடுத்துக்கொண்டு, நதிகள், ஏரிகள், கோவில்களிலுள்ள குளங்கள் முதலிய புண்யதீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்யவேண்டியது. உலராத நெல்லிக்காயளவு மண்ணையெடுத்துத் தலையில் ஒருதரமும், தொப்புளுக்குமேல் இரண்டுதரமும், தொப்புளுக்குக்கீழ் நான்கு தடவையும், பாதங்களில் ஆறு தடவையும் தடவி ஸ்நானம்செய்து ; கோமயத்தை அதற்குரிய மந்த்ரத்தையுச்சரித்துத் தடவிக்கொண்டு ; ஆசமனம்செய்து, வருணஸூக்தங்களை ஜபித்து ஸ்நானஞ்செய்யவேண்டியது. ஜலமானது நாராயணனிடத்திலிருந்து உண்டானபடியால் நாராயணனையே த்யானஞ்செய்துகொண்டு ஸூர்யனைப்பார்த்து ப்ரணவத்தையுச்சரித்து மூன்றுதடவை ஸ்நானமசெய்து, புஷ்பம் தர்ப்பை அக்ஷதை முதலியவைகளோடு இருகைகளாலும் ஜலத்தையெடுத்து ஸகலவேதஸ்வரூபியான ஸூர்யனையுத்தேசித்து அர்க்யம் விடவேண்டியது.

18. யோசித்துக்கொண்டே :—சிலர் "ப்ரஹ்மா, ருத்ரன், ப்ரதானதேவதைகளான காயத்ரீமஹாமந்த்ரத்தை ஜபித்துக்கொண்டிருந்தார" என்று அர்த்தஞ்செய்வது பொருந்தாது ; மற்றப்புண்யகதைகளை அதேகாலத்தில எப்படி ஜபித்துக்கொண்டிருக்கமுடியும் ?—(திலகம்.)

28-8. தானேவந்தார் :—இப்படியே வ்யாஸமஹர்ஷி பாரதம் செய்ய ஆரம்பிக்கும்போதும் ப்ரஹ்மதேவர் அவருடைய ஆச்ரமத்திற்கு வந்தார். வ்யாஸர் அவருக்குத்தகுந்தபடி உபசரித்துத் தான் மஹாபாரதமென்ற க்ரந்தத்தைச் செய்திருப்பதாய்த் தெரிவிக்க ப்ரஹ்மாவும் விசேஷகிருபையுடன் அனுக்ரஹம்செய்து அதையெழுதுவதற்காக விக்னேச்வரரை ஸ்மரிக்கும்படி ஆக்ஞாபித்து மறைந்தார்.—(பாரதம், ஆதிபர்வம் 1.)

நாரதரால் சொல்லப்பட்ட மஹிமையையுடைய வால்மீகியைப்பார்க்கவேண்டுமென்கிற ஆசையால் வந்தார்.—(கோ.)

13. உபசரித்தார் :—வயஸாலும் கல்வியாலும் முதிர்ந்தவர்கள் வரும்பொழுது சிறியவன் உட்கார்ந்திருந்தால் அவனுடைய ப்ராணவாயு மேலே கிளம்ப யத்னிக்கிறது. எழுந்திருந்து வந்தனஞ்செய்வதால் அது தன்னுடைய ஸ்தானத்திற்குப்போகிறது. பெரியோர்களை நாடோறும் வந்தனம்செய்து அனுஸரிக்கிறவன் ஆயுஸ், கல்வி, கீர்த்தி, பலம் இவைகளை அதிகமாயடைகிறான். பெரியோர்களை வந்தனமசெய்யும்போது "இன்னான் வந்தனஞ்செய்கிறேன்" என்று தன்குலம், கோத்ரம், ஸூத்ரம், சாகை, பெயர் முதலியவற்றைச சொலலவேண்டியது. தன் பெயரின் முடிவில் "போ" என்னும் சப்தத்தை உச்சரிக்கவேண்டியது. எப்படியென்றால், "கிருஷ்ணசர்மாநாமா அஹம் அஸ்மி போ." சிறியோர்கள் தன்னை வணங்கும்போது, அவர்கள பெயரையும அதன் முடிவில் அகாரத்தை மூன்றுமாத்ரையாகவும் உச்சரித்து ஆயுஷ்மானயிருக்கக்கடவாயென்று வாழ்த்தவேண்டியது (ஆயுஷ்மான பவகிருஷ்ண). மேற்சொலலியபடி எந்த ப்ராஹ்மணனுக்கு ஆசிர்வாதஞ்செய்யத்தெரியவில்லையோ அவன சூத்ரனுக்கு ஸமானன். அவனுக்கும் ஸ்த்ரீகளுக்கும் தன் பெயரைமாத்ரம சொலலி வந்தனம் செய்யவேண்டியது. வணங்கினபின்பு ப்ராஹ்மணனைக் குசலமாயிருக்கிறாயாவென்றும், க்ஷத்ரியனை வ்யாதியிலலாமலிருக்கிறாயாவென்றும், சூத்ரனை ஸுகமாயிருக்கிறாயாவென்றும் கேட்கவேண்டியது. யாகதீக்ஷைபெற்றிருப்பவன் சிறியவனாயிருந்தாலும், நாமத்தைப்பிறந்தவன் அவன் பெயரைச்சொல்லாமல் "போ, பவான்" என்று அழைக்கவேண்டியது. அந்யன் மனைவியையும், தனக்குப் பந்துவில்லாத ஸ்த்ரீகளையும், "பவதி, ஸுபகே, பகினி" என்று சொல்லியழைக்கவேண்டியது. அம்மான், சிற்றப்பன், பெரியப்பன், மாமனார், யாகபுரோஹிதன் இவர்கள் வந்தால் எழுந்திருந்து வந்தனம் அபிவாதனம் செய்யவேண்டியது. சிறியதாய், அம்மான் பார்யை, மாமியார், அத்தை இவர்கள் குருபத்னிக்கு ஸம